பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பன்னிரண்டு
Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா.7.00

ராம்கோ
சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில்
முதலாம் தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது.

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2034 | மார்கழி 21 | திங்கட்கிழமை | (05-01-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 17

## பிரதமர் ரணிலை ஜனாதிபதியாக்க பாராளுமன்றில் புதிய பிரேரணை

### அமைச்சர் ரவிகருணாநாயக்கா முயற்சி

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து வைக்கும் பிரேரணை ஒன்றை பாராளுமன்றத்தில் கொண்டுவரப் போவதாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கா அறிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே அவர் தனது திட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார்.இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக இருப்பதற்கு உரிமையுள்ளவர். ஆனால் இதற்கு முற்றிலும் மாறாக மூன்று தடவைகள் ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். இதன் மூலம் அவர் ஜனாதிபதியாக இருக்கும் தகுதியை இழந்துள்ளார்.

இந்நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை ஜனாதிபதியாகப் பதவிப்பிரமாணம் செய்து வைக்கும் பிரேரணை ஒன்றை தாம் பாராளுமன்றில் கொண்டுவரப் போவதாக

(12ஆம் பக்கம் பார்க்க)

## 12 மணிநேர இடைவெளியில் வவுனியாவில் இரு இளைஞர்கள்

### அடுத்தடுத்துச் சுட்டுக் கொலை

(கொழும்பு)

வவுனியாவில் 12 மணிநேர இடைவெளியில் இரண்டு இளைஞர்கள் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று முற்பகலும் இரவும் இடம பெற்ற இவ் இரட்டைக் கொலை சம்பவத்தினால் வவுனியாவில் பெரும் பரபரப்பும் அச்சமும் பரவியுள்ளது.

நேற்று முற்பகல் வவுனியா பட்டகாடு பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் அளவெட்டி தெற்கைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் அஜந்தன் (வயது 25) என்ற இளைஞன் மரணமானார்.

பிரஸ்தாப இளைஞன் கோயிலுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக கொண்டிருக்கையில் வீட்டுக்கு அருகாமையில் வைத்து சைக்கிளில் வந்த இனம்தெரியாத நபர்கள் கைதுப்பாக்கியால் சுட்டு விட்டு தப்பியோடியதாகத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளை முன்னெடுக்க

# பிரதமர் ரணிலின் அரசுடன்

# இணைந்து செயற்படுகிறேன்

### சார்க் மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா உரை

(இஸ்லாமாபாத்)


**நாட்டில் தற்போது நிலவிவரும் அரசியல் நெருக்கடிநிலைமைகளைத் தீர்த்து வைப்பதற்கு சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் அரசுடன் தான் இணைந்து செயற்பட்டுவருவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.**

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நேற்று ஆரம்பமான 12வது சார்க் நாடுகளின் உச்சி மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷராப்பின் தலைமையில் ஜின்னா

பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், இந்தியா, இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இம் மாநாட்டில் ஜனாதிபதி தொடர்ந்து பேசுகையில்; பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் பிரதான எதிர்கட்சிகளுக்குமிடையில் மிகக் குறைந்தளவு ஆசனங்களே வித்தியாசமாகக்



12வது சார்க் நாடுகளின் உச்சி மாநாட்டில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷராப்பின் தலைமையில் ஜின்னா மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகிய இந்த உச்சி மாநாட்டில் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இம் மாநாட்டில் ஜனாதிபதி தொடர்ந்து பேசுகையில்; பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் பிரதான எதிர்கட்சிகளுக்குமிடையில் மிகக் குறைந்தளவு ஆசனங்களே வித்தியாசமாகக் காணப்படுகிறது. இதனால் இலங்கையின்

(12ஆம் பக்கம் பார்க்க)



# கசப்பான அனுபவங்களை மறந்து பேசுவோம்

# பிரதமருக்கு அழைப்பு விடுக்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களை தொடரவும் கூட்டு சமாதானக் கவுன்சிலை அமைக்கவும் பேச்சுக்களை நடதத வருமாறு பிரதமரை ஜனாதிபதி அழைதது ள்ளார்.

சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வதற்காக கடந்த கால கசப்பான அனுபவங்களை மறந்து பிரதமருடன் பேச்சுக்களை நடாத்த விரும்புவதாக ஜனாதிபதி சார்க் மாநாட்டிற்குச் செல்லமுன் பிரதமருக்கு அறிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி பிரதமருக்கு சில பொறுப்புக்களையும் அதிகாரங்களையும் ஒதுக்கிக் கொடுப்பார் என்றும் கூட்டு சமாதானக் கவுன்சிலை அமைக்க" அவரை அழைப்பார் என்றும் கட்சியின் உயர் வட்டாரங்கள் தெரிவித்தன. சமாதானக் கவுன்சிலை அமைக்க வருமாறு ஏற்கனவே ஜனாதிபதி விடுத்த அழைப்பை ஐ.தே.க.நிராகரித்த தோடு சமாதானத்தை முன்னெடுக்க 3 அமைசசுக்களையும் திருப்பி ஒப்படைக்க வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளது.

இதேவேளை சார்க் மாநாட்டிலிருந்து ஜனாதிபதி திரும்பியதும் மேலும் ஒரு சுற்றுப்பேச்சுக்களுக்கான அழைப்பு விடுக்கப்படும் எனத்தெரியவருகிறது. (த-6)

# கடலில் நீராடிய இளைஞனை அலை அள்ளிச் சென்றது

## பொன்னாலைக் கடலில் பரிதாபம்

(வட்டுக்கோட்டை)

பொன்னாலை திருவடிநிலை கடற் தீர்த்தக்கரைக்கு நீராடச்சென்ற இளைஞன் ஒருவர் அலையினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

பொன்னாலை வரதராஜப் பொருமாள் ஆலய மார்கழி திருவாதிரை தீர்த்த உற்சவம் நேற்றுக் காலை 10.00 மணிக்கு திருவடிநிலை கடற்கரையில் நடைபெற்றது.

இவ் உற்சவத்துக்குச் சென்று நீராடிய இளைஞனே அலையினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

பொன்னாலையைச் சேர்ந்த முத்துலிங்கம் காந்தருபன (வயது 19) என்பவரே (12ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்கத் தூதுவர் இன்று மகேஸ்வரனை சந்திப்பார்

(யாழ்ப்பாணம்)

அமெரிக்காவின் இலங்கைக்கான புதிய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள ஜெவ்றோ ஜேலுனெற்றிட் இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனை சந்தித்துப் பேசவுள்ளார்.

இச்சந்திப்பு இன்று நண்பகல் 11 மணிக்கு இந்துசமய விவகார அமைச்சின் கொழும்பு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. மரியாதை நிமித்தமாக நடைபெறவுள்ள இச் சந்திப்பில் முக்கிய சில விடயங்கள் கலந்து ரையாடப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை புதிய தூதுவர் தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் தெரியவருகிறது. (ச)

# ஜே.வி.பியுடனான கூட்டணிக்கு எதிராக ஸ்ரீ.சு.கட்சி எம்.பிக்கள் கையெழுத்து வேட்டை

## ஜனாதிபதிக்கு அனுப்புவதற்கும் முடிவு

(கொழும்பு)

கட்சி அங்கத்தவர்களைக் கலந்தாலோசிக்காமல் மாக்சிஸவாதிகளான ஜே.வி.பியுடன் கூட்டணி அமைக்கவேண்டாம் என வலியுறுத்தி சுதந்திரகட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் ஜனாதிபதிக்கு அனுப்புவதற்காக கையொப்பங்களைத் திரட்டிவருகின்றனர். எம்.பிக்களான பாரத லஷ்மன் பிரேமச்சந்திரா,சந்தன கத்திரியாய்ச்சி ஆகிய இருவரும் இணைந்து பொஜமு உறுப்பினர்களில் கிட்டத்தட்ட 60 பேரின் கையொப்பங்களைச் சேகரித்துள்ளனர்.

ஜே.வி.பி.யுடன் வைத்துக்கொள்ளும் எத்தகைய கூட்டும் நாட்டின் 2வது பெரிய அரசியல்கட்சி என்ற அந்தஸ்தை ஒழித்துவிடும். இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் தெரிவித்துள்ளனர். (த-6)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# செய்தித் துளிகள்

## தொலை பேசி வசதி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை தபால் நிலையத்திற்கு தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

15 வருடங்களின் பின்னர் இந்த தபால் நிலையத்தில் தொலைபேசி பொருத்தப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் இப் பகுதி மக்கள் குறைந்த கட்டணத்தில் தமது தொலைத் தொடர்பு சேவைகளை நிறைவேற்றி வருகின்றனர். (உ-89)

## பன்றிகளால் பயிர்கள் நாசம்

(பன்னாலை)

பண்ணாலைப் பிரதேச பயிர் செய் நிலங்களில் இரவு வேளைகளில் உட்புகும் பன்றிகள் பயிர்களை நாசம செய்து வருவதாக பாதிக்கப்படும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பன்றித் தொல்லையை பொறுக்கமாட்டாத விவசாயிகள், இரவு வேளைகளில் கண் விழித்து தோட்டங்களில் காவல் காத்து வருகின்றதும் குறிப்பிடத்தக்கது. (உ-32)

## மலசல கூடம் அமைப்பு

(நவாலி)

இடம்பெயர்ந்து கொட்டடிப் பகுதியில் தற்காலிக கொட்டகைகளை அமைத்துத் தங்கி உள்ள மக்களின் நலன்கருதி பட்டினிக்கெதிரான நிறுவனம் 6 மலசல கூடங்களை அமைத்துக் கொடுத்துள்ளது.

இங்கு சுமார் 200 குடும்பங்கள் தற்காலிக கொட்டகைகளில் தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-102)

## விஞ்ஞான பீடம் இணையத்துளத்தில் இணைந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் இணையத்தளத்தில் இணைந்துள்ளது.

இதன் இணையத்தள முகவரி **w.w.w Jfn. ac lk** என்பதாகும். இவ் ஆரம்ப வைபவம் கடந்த முதலாம் திகதி அன்று யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (உ-7)

## புதிய நிர்வாகம் தெரிவு

(வடலியடைப்பு)

இனுவில் கிழக்கு சிவகாமசுந்தரி சனசமூக நிலைய நடப்பாண்டு நிர்வாகிகள் தெரிவும் ஆண்டுப் பொதுக்கூட்டமும் அண்மையில் நடைபெற்ற போது, புதிய தலைவராக எஸ். யோகானந்தனும் பொருளாளராக கை.பரமேஸ்வரனும் தெரிவுசெய்யப்பட்டனர். (உ-21)

## தொழிற் பிணக்கை ஆராய சபை

(கொழும்பு)

பொது மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் விதத்தில் தொழில பிணக்குகளை விசாரணை செய்யும் மூவர் கொண்ட சபைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவுள்ளதாக நீதி பரிபாலன ஆணைக் குழுவின் செயலாளர் சந்திர ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில், கைத்தொழில் முறைப்பாடுகள் பற்றி ஆராய்வதற்கென வட பகுதியில் தொழிற் பிணக்குகளை ஆராயும் மூவர் சபையொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-60,10)

## முதியோர் இல்லத் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு விளையாட்டு அரங்க வீதியில் அமைக்கப்பட்டுள்ள சாயி முதியோர் பராமரிப்பு இல்லத் திறப்பு விழா எதிர்வரும் 7ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு இல்லத்தின் உபதலைவர் க.அன்னலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. பத்தினியம்மா திலகநாயகம்போல் இந்த இல்லத்தை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கவுள்ளார். (உ)

## பத்திரிகையாளர் குழு யாழ்-வருகிறது

(திருநெல்வேலி)

நேபாளப் பத்திரிகையாளர் குழுவொன்று எதிர்வரும் 21ந் திகதி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

யாழ்ப்பாணம் வருகை தரும் இவர்கள், குடாநாட்டின் நிலைமைகள் குறித்துப் பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடவுள்ளனர்.

22ந திகதி யாழ்ப்பாணம் ஊடகவியலாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபடுவர். (த-43)

## குருப்பட்டம்

(யாழ்ப்பாணம்)

குருத்துவக் கல்வியை நிறைசெய்த செபமாலைதாசர் சபையைச் சேர்ந்த இருவருக்கு குருப்பட்டம் வழங்கும் நிகழ்வு இன்று திங்கடகிழமை மு.ப.10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

செ.யோசப் உதயகுமார், இ.ஜோர்ஜ் அன்ரனி ஆகிய இருவருமே யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் அண்டகையினால் யாழ்.மரியன்னை பேராலயதில் குருப்பட்டம் பெறவுள்ளனர். (உ-3)

## மகாபொல கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யா/ உயர் தொழில் நுட்ப நிறுவன 2002 ஆம் கல்வியாண்டில் மகாபொல கொடுப்பனவுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தமது கொடுப்பனவுகளை எதிர்வரும் 8ஆம் திகதி வியாழக்கிழமை முதல் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3,7)

## கோப்பாய் சிறுவர் இல்ல வேலிக்கு தீ வைப்பு

(கோப்பாய்)

கோப்பாய் மத்தி சாயி சிறுவர் இல்லத்தின் பின்புற வேலி இனம் தெரியாத விஷமிகளால் அண்மையில் தீ வைத்து கொளுத்தப்பட்டுள்ளது.

கொளுந்து விட்டு எரிந்த தீ அயலவர்களின் உதவியினால் அணைக்கப்பட்டது. இதனால் பாரிய சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. மேற்படி இல்லத்தில் 15 ற்கும் மேற்பட்ட சிறுவர்கள் பராமரிக்கப்பட்டுவருகின்றனர். இதற்கு முன்னரும் இது போன்ற தீ வைப்புச் சம்பவம் அங்கு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-79)

## பொருட்கள் பெறுவதில் சிரமம்

(ஊர்காவற்றுறை)

ஊாகாவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங் கிளையினை மீண்டும் சுருவில் பகுதியில் திறக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுருவில் பகுதியில் பெருமளவான குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளமையினால் அவர்கள் தமக்கு வேண்டிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு தூர இடத்துக்குச் செல்லவேண்டி இருப்பதாகவும் மக்களின் நலன்கருதி மேற்படி கிளையினை மீண்டும் திறக்கமாறும் கோரப்பட்டுள்ளது. (உ-75)

## அறக்கொடை நிதியத்தின் ஆண்டுநிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

தியாகி அறக்கொடை நிதியத்தின் 2 வது ஆண்டுநிறைவு விழா எதிர்வரும் 7ஆம் திகதி புதன் கிழமை மு.ப. 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள நிதியப்பணி மனையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் ஆகியோர் பிரதமவிருத்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ் அறக்கொடை நிதியமானது, குடாநாட்டின் பல பகுதிகளிலுமுள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்துவரும் சுமார் ஆயிரத்து 600 ற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை மாதாந்தம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (16)

## தொழில் நுட்ப நிறுவன மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவன விரிவுரைகள் அனைத்தும் எதிர்வரும் 19ந் திகதி ஆரம்பமாகவுள்ளதாக இயக்குநர் ரி.இராஜரட்ணம் அறிவித்துள்ளார்.

மாலை நேர மாணவர்களுக்கான விரிவுரைகள் 24 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-3,7)

## முழுநாளும் மின்சாரம் வழங்குக

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேசத்திற்கு 24 மணித்தியாலங்களும் மின்சாரம் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது இப்பகுதியில் 10 மணித்தியாலங்கள் மட்டுமே மின்சாரம் வழங்கப்பட்டுவருகின்றது.

மேற்படி மின்சார வழங்கல் மூலம் மக்கள் முழுப்பயனையும் பெற முடியாதுள்ளதாகவும் மின்வழங்களை 24 மணித்தியாலங்களும் வழங்குமாறும் இப்பகுதி பொது மக்கள் மின்சார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (உ-75)

## தபாலகத்தை புனரமைக்கக் கோரிக்கை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை தபாலகக் கட்டடத்தை மீள அமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களால் மேற்படி தபாலகக் கட்டடம் முற்றாகச் தேசம அடைந்துள்ளதால் தற்போது இந்தத் தாபலகம் வேறு ஒரு கட்டடத்தில் எதுவித வசதியற்ற நிலையில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-75)

## 350 பேருக்கு செயற்கைக் கால் பொருத்தப்பட்டது

(மருதங்கேணி)

முல்லைத் தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டக்களில் நடமாடும் சேவைகளை நடத்திய மன்னார் வாழ்வோதய நிறுவனம் இதுவரை 350 பேருக்கு செயற்கைக் கால்களைப் பொருந்தியுள்ளது.

யுத்த காலத்தின் போது கால்களை இழந்தவர்களுக்கே இவ்வாறு செயற்கைக் கால்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இவர்களில் 100 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபாவை சுயதொழில் மேற்கொள்வதற்காக இந்ந நிறுவனம் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-35)

# சுகாதார ஊழியர்களின் இடமாற்றம் ஒத்திவைப்பு

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்தில் உள்ள சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் கடமைபுரியும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நலசேவை உத்தியோகத்தர்களிற்கு வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கடந்த முதலாம் திகதி முதல் அறிவிக்கப்பட்ட இடமாற்ற உத்தரவுகள் தற்காலிகமாய் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக மாகாண சுகாதாரப் பணிப்பாளர் கடிதமூலம் அறிவித்துள்ளார்.

வழங்கப்பட்ட இடமாற்ற உத்தரவுகள் தொடர்பான மேன்முறையீடுகள் இதுவரை அமைச்சினால் பரிசீலனை செய்யப்படவில்லை எனவும் அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சகாதார சேவைகள் திணைக்களத்தில் உள்ள பதிவு மற்றும் உதவி வைத்திய அதிகாரிகளின் இடமாற்ற உத்தரவுகள் கடந்த முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ந-252)

# சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தில் ஆட்களைவு

(கொழும்பு)

சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தில் பணியாற்றி வந்த 67 பேர் புத்தாண்டு தினத்தன்று திடீர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின் தற்போதைய நிர்வாகம் புத்தாண்டு தினத்தன்று இந்த வேலை நீக்க அறிவித்தலைத் தமக்கு விடுத்திருப்பதாக வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

செய்தி ஆசிரியர்கள், நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள், செய்தி தொகுப்பாசிரியர்கள், செய்தி வாசிபவர்கள், நிகழ்ச்சி அறிவிப்பாளர்கள் மற்றும் தட்டெழுத்தாளர்கள், மொழி பெயர்ப்பாளர்கள், ஒளியமைப்பு, தொழில் நுட்பவியலாளர்கள், ஒளிப் படக்கருவி இயக்குநர்கள் ஆகியோர் இவ்வாறு வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களில் அடங்குகின்றனர்.

இதேவேளை, சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின் புதிய நிர்வாக சபையும், அதன் பணிப்பாளரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மக்கள் தொடர்பாடல் அ[illegible]சைப் பொறுப்பேற்ற பின்னர் புதிதாக நியமிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-63,10)

# கொடிகாமம் கோயிலாமனை வீதி மக்கள் பாவனைக்கு விடப்பட்டது


(யாழ்ப்பாணம்)

பொதுமக்களின் பாவனைக்காக கொடிகாமத்திலிருந்து கோயிலா மனை ஊடாகச் செல்லும் வீதி இராணுவத்தினரால் கடந்த வெள்ளிக் கிழமை திறந்து விடப்பட்டுள்ளது.

இராணுவ முகாமிக்கு முன்னால் உள்ள இவ் வீதி பொதுமக்களின் பாவனைக்கான திறந்துவைக்கப்பட்ட நிகழ்வில், 52 ஆவது படைக் கட்டளை அதிகாரி பிறிகேடியர் பீ.ஏ. சந்திரசிரி, 522 ஆவது படையணித் தளபதி, சாவகச்சேரி பிரதேச செயலாளர் மற்றும் அப் பகுதி பொது மக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இந் நிகழ்வில் கலந்து கொண்டோரை கீழுள்ள படத்தில் காண[illegible].





# கிராம அலுவலர் கடமை செய்ய வசதி ஏற்படுத்துக

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள கிராம அலுவலர்கள் தமது கடமைகளைச் செய்வதற்கு வசதியாக, தனியான கட்டடங்களையும் தளபாடங்களையும் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று வடமராட்சி கிழக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு நிறுவனம் யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

கடந்த காலங்களில் இடம் பெற்ற யுத்தநடவடிக்கைகள் காரணமாக சேதமடைந்துள்ள தனியார் வீடுகளையே கிராம அலுவலர்கள் தமது அலுவலகமாக உபயோகித்து வருகின்றனர்.

அவ் அலுவலகங்கள், தளபாட வசதிகளோ அன்றி ஏனைய அடிப்படை வசதிகளோ இல்லாத நிலையில் இயங்கிவருகின்றன. இதனால் வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள கிராம அலுவலர்களுக்கு தனியான அலுவலகக் கட்டடங்களை மிக விரைவில் அமைத்துத் தருமாறும்,

மருதங்கேணியில் உள்ள பொது விளையாட்டரங்கை சீரிய முறையில் புனரமைப்புச் செய்து தருமாறும் மேற்படி நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.

(இ-43)

## வட்டுக்கோட்டையில் வைத்தியர் விடுதி

(பொன்னாலை)

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலையில் புதிதாக வைத்தியர் விடுதிக் கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

50அடி நீளமான இக் கட்டடத்தை சுகாதாரத் திணைக்களம் அமைத்துக்கொடுக்க முன்வந்துள்ளது.

இக் கட்டட அமைப்பிற்கான பூர்வாங்க வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ந-49)


## வெற்றிகளை ஈட்டிவரும் மத்திய கல்லூரியின் மொட்டு




யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தரம்-1 மாணவன் மோ. ஆகாஷன் அகில இலங்கை ரீதியில் திருகோணமலையில் நடாத்தப்பட்ட மேசைப் பந்தாட்டப் போட்டியில் 7வயது சிறுவர்கள் பிரிவில் 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளதுடன், வடக்கு-கிழக்கு மாகாண மட்டப் போட்டியில் 9 வயது சிறுவர்கள் பிரிவில் சன்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியால் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட 10 வயது சிறுவர்களுக்கான கரம்,பட்மின்ரன் போட்டிகளில் இரண்டாம் இடத்தினையும் மேசைப் பந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளஇவர் யாழ்ப்பாணம் வை. எம்.சி.எ. மாவட்ட மட்டத்தில் நடாத்திய 10வயது சிறுவர்களுக்கான பட்மின்ரன்,சதுரங்கம் ஆகிய போட்டிகளில் இரண்டாமிடத்தையும் மேசைப்பந்தாட்டத்தில் முதலாமிடத்தையும் பெற்றுள்ளார்.

மேலும் கொழும்பில் உள்ள பேச்சு, இசை சர்வதேச ஆங்கிலக் கல்லூரி நடாத்திய சிறுவர்களுக்கான செய்முறைப்பரீட்சையில் 100புள்ளிகளைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



## நாடுகளை தேற்றும் டிரோன்




# யாழில் யுத்தத்திற்கு மத்தியிலும் சமயப்பற்று மேம்பட்டிருக்கிறது

## தவத்திரு சாந்தலிங்க அடிகளார் பெருமிதம்

(ஏழாலை)

யாழ். மண்ணில் கடந்த காலத்தில் ஏற்பட்ட யுத்தத்தால் அதன் அழிவுகளில் இருந்து மக்கள் இன்னமும் முழுமையதாக மீளவில்லை. ஆயினும், அவர்களிடையே சமயப் பற்றுணர்வும், மனவெழுச்சிகளும் மேம்பட்டு இருப்பதை எண்ணி நான் பெருமை அடைகின்றேன். இவ்வாறு தமிழ்நாடு பேரூர்ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தெரிவித்துள்ளார்.

குப்பிளான் சொக்க வளவு சோதி விநாயகர் ஆலயத்தில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற அருள் உரை நிகழ்விலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் த.தர்மலிங்கம் தலைமையில் இடம் பெற்ற மேற்படி சுவாமிகளின் தரிசனமும் அருளுரையும் நிகழ்வில், ஆசியுரையினை சிவஸ்ரீகு.ஜெகதீஸ்வரக்குருக்களும்,வரவேற்புரையினை சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கமும் வாழ்த்துரையினை தவத்திரு ஸ்ரீ விசுவம்மா விசாலாட்சி மாதாஜியும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து அருளுரை நிகழ்த்திய தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் மேலும் குறிப்பிடுகையில்,சைவமும் தமிழும் செழித்தோங்கும் யாழ்ப்பாணத் திருநாட்டின் இதயம் போன்று விளங்குவது இக் குப்பிளான் பகுதியாகும். காசிவாசி சொந்தில் நாதையர் போன்ற பெருமைமிக்க பெரியோர்கள் வாழ்ந்த சிறப்புப்பெற்ற இப்பூமியில் நானும் உரை நிகழ்த்தும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

இத்தகைய அரிய வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

துன்பம் எனும் சொல்லை நாம் வார்த்தையளவிலேயே வைத்துக் கொள்ள வேண்டும். வாழ்வில் அதன் பிரதிபலிப்பை எதிர்கொள்ளக் கூடாது. இதனை மேம்படுத்துவதற்கும், என்றும் இன்பமாக வாழ்வதற்கும், சமய நெறி முறைகளை வழுவாது பின்பற்ற வேண்டும் என்றார். (இ-90)


## வடக்கு–கிழக்கில் முதலீட்டு வலயங்கள்



மறைந்தும் மறையாத

மாமனிதர் குமார்பொன்னம்பலத்தின்

நான்காம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம்



புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரியின் இந்து மாமன்றத்தினரால் சந்நிதியான் ஆச்சிரமத்தில் அண்மையில் நடாத்தப்பட்ட இசை மலர்கள் நிகழ்ச்சியில் கல்லூரி அதிபர் வ. ஆறுமுகம் அறிமுகவுரை வழங்குவதைப் படத்தில் காணலாம்.



யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் மாணவத் தலைவர் விபுலானந்தன் ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்ட விபுலானந்தன் கேடயத்திற்கான கூடைப் பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரியின் பெண்கள் அணியினருடன் பொறுப்பாசிரியர் திருமதி குணரட்ணம் மற்றும் பயிற்றுநர் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்:பிரதீபன்)

## வடக்கு–கிழக்கில் முதலீட்டு வலயங்கள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இரு முதலீட்டு வலயங்களை அமைக்கும் பணியில் இலங்கை முதலீட்டுச்சபை ஈடுபட்டுள்ளது.

இத்தகைய முதலீட்டு வலயங்களை உருவாக்குதன் மூலம் வடக்கு-கிழக்கில் 30ஆயிரம் வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்படும் என்றும் இலங்கை முதலீட்டுசபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

(ந-60,10)

## அரியாலையில் திருடர் தொல்லை

(யாழ்ப்பாணம்)

அரியாலைப் பகுதியில் திருடர் தொல்லை அதிகரித்து வருவதாகத் தெரியவருகின்றது.

அரியாலை கலை மகள் வீதி மற்றும் திருமகள் வீதிப் பக்கங்களிலுள்ள வீடுகளின் யன்னல்களைத் திருடர்கள் இரவு நேரங்களில் உடைத்து வீடுகளில் இருக்கும் பெறுமதியான பொருட்களைத் திருடி வருவதாக அப்பகுதிப் பொது மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருடர்களின் தொலைகளைக் கட்டுப்படுத்த உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கும்படி இப் பகுதிப் பொதுமக்கள் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(உ-16)


## மாமனிதர் குமார்பொன்னம்பலத்தின்

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம்

**தரணியெங்கும் தவிக்கும் தமிழர் தம் உரிமைக்குரலைக் கர்ச்சித்த மறத்தமிழனை நன்றி மறவாமல் நினைவு கூருவோமாக.**

**இடம்:-** கைலாசபதி கலைஅரங்கம்-யாழ்.பல்கலைக்கழகம்
**காலம்:-** 05-01-2004 திங்கட்கிழமை
**நேரம்:-** மாலை 3.30 மணி

### நிகழ்ச்சி நிரல்

மலர் அஞ்சலி:-

அகவணக்கம்:-

தலைமையுரை:- திரு.சீ.வி.கே.சிவஞானம் (உபதலைவர், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்)

நினைவுரைகள்:- அருட்திரு.ம.சேவியர் கருணாரத்தினம் (பங்குத்தந்தை, நாவாந்துறை)

பேராசிரியர் சு.மோகனதாஸ் (துணைவேந்தர் யாழ்.பல்கலைக்கழகம்)

பேராசிரியர் எஸ்.சண்முகதாஸ் (தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர்

கௌரவ அ.விநாயகமூர்த்தி (பா.உ.)
(தலைவர் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்)

திரு.ப.பகீர்தரன் (தலைவர், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்)

திரு.த.மகாசிவம் (பொதுச் செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்)

திரு.எஸ்.கஜேந்திரன் (தலைவர், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை)

**நன்றியுரை:-** திரு.ஆர்.ஈ.ஆனந்தராசா (உபதலைவர், அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ்)

**தமிழ்பேசும் இனத்திற்காக இறுதி மூச்சுவரை போராடி, இறுதியில் தன்னுயிரைத் தியாகம் செய்த தீந்தமிழனுக்கு எமது நன்றிக்கடனைச் செலுத்த அனைவரும் திரண்டுவந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

*மாமனிதர் குமார் பொன்னம்பலம்*
*ஞாபகார்த்தக் குழு.*

(C/7091)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சகல விதமான T.V அன்ரனாக்கள், பூஸ்டர்கள், வயர் மற்றும் T.V, றேடியோ உதிரிப் பாகங்கள் நிதான விலையில் பெற்றுக் கொள்ள வேண்டிய இடம். **நியு சிற்றி றேடேர்ஸ்** 135, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். (குளத்திற்கு முன்பாக) T.P:222-3226 (சி-6980)

### மணமகன் தேவை

சொந்த வீடுள்ள விஸ்வ குலத்தைச் சேர்ந்த செவ்வாய் 8ல்(சிங்கத்தில்) கிரக பாவம் 6 11/6, பூர நடசத்திரம் 4ம் பாதம், 17-7-1961ல் பிறந்த பெண்மணிக்கு ஏற்ற மணமகன் தேடுகின்றோம். காலசர்ப்ப தோஷ கிரக நிலை உள்ளோரும் வெளியூரில் நிரந்தர விசாகொண்டோரும் விரும்பத்தக்கது. தகவல்கள இரகசியம்பேணபடும். நேரடியாக அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ள V.A.சிவராசா, இலக்கம் 01,பழம் றோட் கந்தர்மடம யாழ்ப்பாணம் என்ற விலாசத்தை நாடவும் எம்மிடம் எலலா சமூகத்தினருக்கும் மணமக்கள உள்ளன சோதிடம், விவாகப பொருத்தம், ஜாதகம் எழுத, ஏற்ற மணமக்களைத் தேடித்தர தொடர்பு கொள்ளுங்கள். (8072)

### திருவாசக முற்றோதல்

(பொன்னாலை)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய கண்ணகாம்பிகா சமேத கண்ண லிங்கேஸ்வரர் ஆலயத்தில் எதிர் வரும் 8ஆம் திகதி காலை 6.30 மணிக்கு திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது. தொடர்ந்து மகேஸ்வர பூசையும்இடம்பெறும். (ந-49)

# தமிழர் பிரிந்து செல்வதைத் தவிர்க்க சிங்களத் தலைமை முன்வர வேண்டும்

## அ.இ.த.காங்கிரஸ் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் சபைக் கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

கட்சியின் தலைவரும் நடாளுமனற உறுப்பினருமான அ.விநாயக மூர்த்தி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பொதுச் செயலாளருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சிரேஷ்ட உப தலைவர் நகுமரகுருபரன் ஆகியோா உட்பட பல நுற்றுக்கணக்கான கட்சித் தொண்டர்கள் ஆதரவாளாகள் உறுபபாளர்கள் கலந்து கொண்டனர்.

இதனபோது கட்சியின் நன்மை கருதியும், தமிழீழத் தேசிய இனத்தின விடிவினைக் கருத்தில் கொண்டும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

01) கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக அரசியல் உரிமைகள அங்கிகரிக்கப்படாது மறுக கப்பட்ட ஈழம் வாழ்தமிழ் மக்களாகிய நாம் சாத்வீக ரீதியிலும் ஜன நாயக ரிதியிலும் நடாத்தி வந்த போராட்டம் வெற்றிதராத நிலையில், ஆயுதம் தாங்கிய தனிநாட்டுப் போராட்டமாக எமது இனம் தனது போராட்ட வடிவத்தை மாற்றிக் கொண்டது. இதனால் ஏற்பட்ட அழிவுகளும் துயரங்களும் ஏற்படுத்திய தாக்கங்களை அனுாவித்தவர்கள் தமிழர்கள் காரணமாக எமது இனம தனது போராட்ட வடிவத்தை மாற்றிக்கொண்டது. இதனால் ஏற்பட்ட அழிவுகளும், துயரங்களும் ஏறபடுத்திய தாக்கங்களை அனுபவித்தவர்கள் தமிழர்கள்தான் என்றாலும் நாட்டின் மக்கள் அனைவருமே பாதிக்கப் பட்டவர்கள் தான் என்பதை மறுக்கமுடியாது. இந்த அழிவுகளும் துயரங்களும் இனியும தொடராத வகையில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை முன மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டு, தடைபட்டுப போயுள்ள சமாதானப் பேச்சுக்களை தென்னிலங்கை அரசும் அதிகார சக்திகளும் முன்னெடுக்கத் தொடர்ந்தும் தாமதம் காட்டினால் நாம், நமது சுயநிர்ணய உரிமையினை பிரயோகித்து பிரிந்து செல்வது தவிர்க்க முடியாததாகும் எனவே இந்நிலைமையைத் தவிர்ப்பதற்குத் தீர்வு வழக்கங்கூடிய அதிகார பலத்துடன் சிங்களத் தலைமை தாமத மின்றி முன்வரவேண்டும்.

02) தத்தமது வீடுகளில் குடியிருக்கும் உரிமை மறுக்கப்பட்டிருக்கும் தாயக மக்கள் தமது சொந்த வாழ்விடங்களில் சென்று வாழ்வதற்கு போடப்பட்டுள்ள தடைகளை உடனடியாக நீக்கவேண்டும்.

03) கடற்றொழிலாளர்கள் தமது கடறபிரதேசங்களில் எதுவித தடையுமின்றி தொழில் புரிவதற்கும் தமது வாழ்வாதார மேம்பாடுகளை மேற்கொள்வதற்கும் போடப்பட்டுள்ள தடைகளை உடனடியாக நீக்க வேண்டும்.

04) சாவதேச சட்டங்களுக்கு மாறாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அநீதியான முறையில் கைது செய்யப்பட்டு எதுவித நீதிமன்ற விசாரணைகளும் இன்றி மனித சுதந்திரமும், உரிமையும் மறுக் கப்பட்டு பல வருடங்களாக சிறையில் வாடும் 50க்கும் மேற் பட்ட தமிழ் மக்களை உடனடியாக விடுதலைசெய்ய வேண்டும்.

05) எமது உறவினர்கள் தேடி அலைந்துகொண்டிருக்கும் காணாமல் போய்விட்ட தமதுஉறவுகள் தொடர்பான உண்மை நிலையினை ஒளிவு, மறைவு இல்லாது தெரியப்படுத்த வேண்டும். அத்துடன் மனிதஉரிமை ஆணைக்குழுவின் விசாரணைக்குழு அறிககைப்படி உடனடியாக நடவடிக்கை எடுத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு போதிய நட்டஈட்டு நிவாரணம் வழங்கவேண்டும்.

06) கட்சியின் இன்றைய வளர்ச்சி நிலை மற்றும் இன்று நிலவும் தேசிய அரசியல் சூழல் என்பவற்றுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையில் கட்சியின் யாப்பினைத் தருத்தி அமைக்க கஜேந்திரகுமார், பொன்னம்பலம், அ.விநாயக மூர்த்தி, சி.வி.கே.சிவஞானம், கு.மு.தர்மராசா, கலாநிதி நகுமர குருபரன் ஆகியோர் கொண்ட குழுவை நியமிப்பது என்ற தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.(த-4)

# ஜனாதிபதி சந்திரிகாவின் பதவிக்காலம் 2005ஆம் ஆண்டுடன் முடிவடைகிறது!

## பிரபல சட்டத்தரணி விவேகானந்தன் விளக்கம்

(கொழும்பு)

**இலங்கை அரசியலமைப்பின் படி 2005ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாகப் பதவி வகிக்க முடியாது.**

**இவ்வாறு பிரபல சட்டத்தரணி சி.வி.விவேகானந்தன் கருத்துத் தெரிவித்துள்ளார்.**

அரசியலமைப்பின்படி 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டும. அரசியலமைப்பு உறுப்புரை 30(2) ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஆறு

திற்குமேல் நீடிக்க முடியாது.

ஜனாதிபதியின் தெரிவை தேர்தல் ஆணையாளர் பிரகடனப்படுத்துவார். அப்பிரகடனத்திலிருந்து ஜனாதிபதி 6வருடங்களுக்குப் பதவியி

ஒரு தவணைக்குப் பதவி வகிப்பதற்காக தேர்தல் நடத்தலாம்.

மேற்கூறிய தேர்தல் நடத்தப் பட்டால் 6ஆண்டுகளுக்கு ஜனாதிபதி பதவியிலிருப்பார் என்றும் புதிய உறுப்புரை விவரிக்கின்றது.

அவ்வாறு நான்கு ஆண்டுகளின்

வகிக்க முடியாது.

1999ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இரண்டாவது தடவையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டசந்திரிகா 2005ஆம ஆண்டு வரையுமே பதவி வகிக்க முடியும்.

என்றும சட்டத்தரணி விவேகானந்தன் மேலும்தெரிவித்துள்ளார். (த)

# முறுகண்டியில் மணல் ஏற்றிய சிறுவனை கரடி தாக்கியது

(மருதங்கேணி)

கரடிதாக்கியதன் விளைவாக சிறுவன் ஒருவன் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளான்.

பாய்நதுவந்து மேற்படி சிறுவனைத் தாக்கியது. இதனைக்கண்ட உழவு இயந்திர சாரதி கரடியைத்தாக்கியுள்ளார். இதனால் கரடி அப்பகுதியிலிருந்து தப்பி ஓடியது கரடியால் தாக்கப்பட்டு சிறுகாயங்களுக்

மைப்பு உறுப்புரை 30(2) ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஆறு ஆண்டுகளுக்கு மட்டுப்படுத்துகின்றது.

ஆறு ஆண்டுகளுக்குக் கூடுதலாகப் பதவியிலிருக்க வேண்டுமானால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை நடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளும், மக்கள் தீர்ப்பும் பெற்று யாப்பின் 30(2) உறுப்புரையை மாற்றியமைக்க வேண்டும். அவ்வாறுசெய்வது இலகுவான கரியமல்ல. இதுவரையில் அவ்வாறு செய்யப்படவுமில்லை.

இந்நிலையில் ஜனாதிபதியின் பதவிக்காலத்தை ஆறு வருடத்

வர். அப்பிரகடனத்திலிருந்து ஜனாதிபதி 6வருடங்களுக்குப் பதவியிலிருப்பார்.

யாப்பின் உறுப்புரை 31(3)ன் பிரகாரம் பதவியிலுள்ள ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர், ஒரு மாதத்திற்குக் குறையாமலும், இரண்டு மாதங்களுக்கு மேற்படாமலும் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

அரசியலமைப்புக்கான மூன்றாவது திருத்தத்தின் பிரகாரம், ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடங்கி 4ஆண்டுகள் முடிவடைந்த பின்னர், ஜனாதிபதி விரும்பினால், மேலும்

உறுப்புரை விவரிக்கின்றது.

அவ்வாறு நான்கு ஆண்டுகளின் பின்னர் தேர்தல் நடைபெற்று தேர்தல் முடிவுகள் வெயிடப்படும்பொழுது, முதலாவது பதவிக்காலம் முடிவடைந்துவிடும்.

இந்நிலையில் இரண்டாவது தவணைக்காலம் 6வருடங்களோடு முதலாவது பதவிக்காலத்தின் மிகுதி வருடங்களையும் சேர்த்துப் பதவி

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

மேற்படி சம்பவம் கடந்த முதலாந் திகதி பழைய முறுகண்டியில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

உழவு இயந்திரத்தில் சென்று பழைய முறுகண்டிப் பகுதியில் மணல்ஏற்றிக்கொண்டு இருக்கையில் காட்டிற்குள் இருந்த கரடி

தியிலிருந்து தப்பி ஓடியது கரடியால் தாக்கப்பட்டு சிறுகாயங்களுக்குள்ளான சிறுவன் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான்.

அக்கராயன் மணியங்குளம் புதிய குடியிருப்பைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுகன்(வயது 16) என்ற சிறுவனே கரடியினால் தாக்கப்பட்டவாராவார். (த-35)

## வல்லிவட்டித் துறைக் கடலில்

# றோலர் படகு மீன் பிடியால் வலைத் தொழிலாளர் பாதிப்பு

(திருநெல்வேலி)

வடமராட்சி வல்வெட்டித்துறைக் கடற்பகுதியில் அப் பகுதி மீனவர்களில் பெரும்பாலானோர் றோலர் படகுகள் மூலம் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டுவருவதால் வலை மூலம் தொழிலை மேற்கொள்ளும் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அப்பகுதி சிறுதொழில் மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேற்படி பகுதியில் றோலர் படகுகள் மூலம் கடற்தொழிலில் ஈடுபடுவதால் தமது வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் அவற்றால் சேதமாக்கப்படுவதாகவும்,

கடந்த கலங்களில் இந்திய றோலர் படகுகளின் அத்து மீறல் மீன் பிடியால் தாம்பெரிதும் இன்னல்களை அனுபவித்து வந்ததாகவும் தற்போது உளளூர் றோலர் படகுகள் மூலமும் தாம் பாதிப்படைந்து வருவதாகவும் சிறு தொழில் மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.(த-43)

## இடைக்கால நிர்வாகம் குறித்த

# முஸ்லிம் தரப்பு யோசனைகளை கட்சியின் அதியுயர் பீடம் அங்கீகரித்தது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தயாரித்துள்ள இடைக்கால நிர்வாகசபை குறித்த மாற்று யோசனைகளுக்கு கட்சியின் அரசியல் பீடம் பூரண ஆதரவை வழங்கியுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தயாரித்துள்ள மாற்று யோசனைகளைகட்சியின் தலைவரும் கப்பல துறை மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சருமான ரவூபஹகீம் நேற்று முன்தினம் அரசியல் அதியுயர் பீடத்தின் அங்கரதத்திற்காக சமர்ப்பித்த போதே இது தொடர்பான தனது பூரண ஆதரவை அது தெரிவித்துள்ளது.

இதேவேளை, கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப ஹகீம் இதுபற்றி ஊடகம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையில்,

இனப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைக்கின்ற போது அதில் முஸ்லிம்களுடைய அபிலாஷைகள் எவ்வாறு திருத்திப்படுத்தப்பட வேண்டும் என்பது குறித்து விரிவாக விளகப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸ் கட்சியினால் தயாரிக்கப்பட்ட பூர்வாங்க யோசனைகளை நேற்று முன்தினம் கட்சியின் அரசியல அதியுயர்பீடம் கூடி அங்கீகரித்துள்ளது.

இந்தயோசனைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கும் ஒருசில விடயங்கள் குறித்து பரவலான கருத்துப் பரிமாற்றங்களை நாங்கள் செய்து கொள்வதெனத தீர்மானித்துள்ளோம்.

அந்த வகையில் விரைவில் வடமாகாணத்தைச் சேர்ந்த புத்திஜீவிகள் மற்றும் பாராளுமன்ற உறுபபினர்களுடன் கலந்துரையாடவுள்ளோம்

அதுபோன்று கிழக்கு மாகாணத்தில் உள்ள புத்திஜீவிகள், இதரக் கட்சிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உலமாக்கள், சமூக அமைப்புக்கள் ஆகியவற்றுடனும் கலந்தாலோசிக்கவுள்ளோம்

எமது யோசனைகள் குறித்து பலதரப்பினருடனும் கலந்துரையாடிய பின்னரே எமது இறுதி வரைபு பற்றி பகிரங்கமாக அறிவிப்போம் என்றார்.

(த-61,10)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# ஆயுதக் கடத்தல்களைக் கட்டுப்படுத்த சார்க் நாடுகள் கூட்டிணைய வேண்டும்

## பாகிஸ்தானில் பிரதமர் வாஜ்பாய் உரை

(இஸ்லாமபாத்)

தெற்காசிய நாடுகளில் இருந்து வறுமையை அடியோடு அழிக்க வேண்டும் என்று பிரதமர் வாஜ்பாய் வலியுறுத்தியுள்ளார்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்தில் நேற்று ஆரம்பமான சார்க் உச்சிமாநாட்டில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சார்க் நாடுக்ளில் ஒன்று மற்றொன்றின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் நிலை மாற வேண்டும்.

உல்பா தீவிரவாதிகளுக்கு எதிராகப் பூட்டான் அரசு எடுத்த கடும் நடவடிக்கை மற்றைய சார்க் நாடுகளுககு ஒரு முன் உதாரணமாகும்.

சார்க் நாடுகளிடையே போதைப் பொருள் கடத்தல், ஆயுதக் கடத்தல் உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண இந்த நாடுகள் கூட்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

சார்க் நாடுகளிடையே ஒத்துழைப்பை அதிகரிப்பதன் மூலம் தெற்காசியப் பகுதியில் அமைதியை ஏற்படுத்தலாம்.

தெற்காசிய நாடுகளில் இருந்து வறுமையை அடியோடு ஒழிக்க வேண்டியது மிகவும் முக்கியமானது.

இந்தக் குறிக்கோளை எட்டாத வரை இதுபோன்ற திட்டங்களின் பயன்கள் சார்க்நாடுகளில் வாழும் சாதாரண மக்களைச் சென்றடைய முடியாது என்றும் வாஜ்பாய் கூறினார். (த-9)



இஸ்லாமபாத்தில் நடைபெறும் சார்க் மாநாட்டிற்கு முன்னதாக, சார்க் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸவந் சின்ஹாவும், பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குர்ஷிட் முகமட் கசூரியும்.

# எதியோப்பியாவில் ஆலயம் இடிந்து வீழ்ந்ததில் 15பேர் பலி

(அடிஸ்ஸபாபா)

எதியோப்பியாவில் புராதன ஆலயம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 15 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

மலையின் உச்சியில் அமைந்துள்ள இந்த ஆலயம் திடீரென இடிந்து வீழ்ந்ததாக அந்தநாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

13ஆம் நூற்றாண்டில் நியமிக்கபட்ட இந்த ஆலயத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.


சம்பவத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம என்று அஞ்சப்படுகின்றது. ஆலயத்தில் புனித திருவிழா ஒன்று நடைபெற்றுக்கொண்டிருந்தது. இதில் பங்குகொண்டிருந்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-9)

# தீவிரவாதிகளின் தாக்குதலில் இந்தியப் பொலிஸார் ஐவர் பலி

இந்தியாவின் கிழக்குப் பகுதியில் திவிரவாதிகள் பொலிஸார் மீது மேற் கொண்ட துப்பாக்கிச் சூட்டில், 5 பொலிஸார் கொல்லப்படடதுடன் 2 பேர் காயமடைந்துள்ளனர்.

டனிஜபரி என்ற பகுதியில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸாரே தாக்கப்பட்டுள்ளனர்.

திரிப்புரா தேசிய விடுதலை முன்னணி இயக்கத் தீவிரவாதிகளே இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாக இந்தியப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (இ-9)



தைவான் தலைநகர் தைபயில் நேற்று முன்தினம் முதல் 11 ஆம் திகதி வரை நடைபெறும் கண்காட்சியில் இடம்பெறும் டயோட்டா நிறுவன மின்சக்திக் கார்.



WORLD NEWS உலக தரிசனம்

# பிரிட்டிஷ் இராணுவம் தாக்கி ஈராக் கைதி ஒருவர் மரணம்!

(பக்தாத்)

ஈராக்கில் பிரிட்டிஷ் துருப்புக்களால் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் கைதிகளில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஈராக்கில் நிலைகொண்டுள்ள பிரிட்டிஷ் துருப்புக்கள் கடந்த வருடம் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவரே உயிரிழந்தவராவார்.

பிரிட்டிஷ் துருப்புக்களால் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டே அவர் உயிரிழந்துள்ளதாக அந்தநாட்டுப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உயிரிழந்த வஹாமௌஷா என்பவரின் சடலம் அவரது பெற்

# கொலம்பிய மாக்ஸிஸற்றை இராணுவம் கைதுசெய்தது

(போகாடா)

கொலம்பிய மற்றும் ஈக்குவ



இஸ்லாமபாத்தில் நடைபெறும் சார்க் மாநாட்டையொட்டி, மாநாடு நடைபெற உள்ள இடத்தின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள படைவீரர்.

# இராணுவம் கைதுசெய்தது

(போகாடா)

கொலம்பிய மார்க்ஸிஸற் அமைப்பின் சிரேஷ்ட கொமாண்டர் சைமன்ரிஜியரெட் என்பவரை அந் நாட்டு இராணுவத் தினர் கைதுசெய் துள்ளனர்.

பிரஸ்தாப கொமாண்டர் வைத் தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுவந்தமை தொடர்பாக இர கசியத் தகவல்கள் கிடைத்ததை அடுத்தே அவர் கைதுசெய்யப்பட் டுள்ளதாக இராணுவம் தெரிவித் துள்ளது.

கொலம்பிய மற்றும் ஈக்குவ டோர் அதிகாரிகளின் கூட்டுமுயற்சி நடவடிக்கைகளாலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, சைமன்ரிஜிய ரெட் என்பவர் தொடர்பான தக வல்களை வழங்குவோருக்கு சுமார் 8 லட்சத்து 24 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பரிசாக வழங்குவதாக கொலம்பிய அரசாங்கம் முன்னர் அறிவித்திருந்தமை இங்கு குறிப் பிடத்தக்கது.

(இ-4)

பத்திரிகை ஒன்று செய்தி வெளி யிட்டுள்ளது.

உயிரிழந்த வஹாமௌஷா என்பவரின் சடலம் அவரது பெற் றோரிடம் ஒப்படைக்கப்பட்டதாக வும், அந்தச் சடலத்தில் அடிகாயங் கள் காணப்பட்டதாகவும் அப்பத் திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, உயிரிழந்தவரின் பெற்றோருக்கு நஷ்டஈட்டுத் தொகையாக 8ஆயிரம் அமெரிக்க டொலர்களை வழங்க பிரிட்டிஷ் இராணுவம் தீர்மானித்திருப்பதாக வும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# ஈரானில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐ.நா. அவசர உதவி வழங்க நடவடிக்கை

(நியூயோர்க்)

ஈரானில் பூமியதிர்ச்சியால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு அவசர உதவி களை வழங்குவதற்கான நடவடிக் கைகளை ஐக்கிய நாடுகள் சபை மேற கொள்ளவுள்ளது.

இதனை முன்னிட்டு சேதவிபரம் பற்றிய அறிக்கை தயாரிக்க குழு வொன்றை ஈரானுக்கு அனுப்பிவைப் பதற்கு ஐக்கிய நாடுகள் சபை தீர மனித்துள்ளது.

இந்த ஆய்வு அறிக்கை கிடைத்த பின்னர் ஈரானுகககு உதவ உலக நாடு களிடம் நிவாரண உதவிகளைக் கோர வுள்ளதாக ஐக்கிய நாடுகளின் மனி தாபிமான இணைப்பு அலுவலகம் கெரிவிக்குள்ளது.

பாம்நகரில் ஏற்கனவே மீட்புப் பணியாளர்கள் கடமைகளில் ஈடுபட் டுள்ள நிலையில், அங்கு அனுப் பிவைக்கப்படவுள்ள ஐக்கிய நாடு களின் ஆய்வுக் குழுவினர் தமது கடமைகளை இவ்வாரத்தில் நிறைவு செய்து கொண்டு ஈரானின் தலைநகரரான தெஹரானுக்குத் திரும்புவர் என எதிர்பார்க்கப்படு கின்றது.


இதேவேளை ஈரானின் பாம் நகரில் இடம்பெற்ற பூமியதிர்ச்சியின் போது சேதமடைந்த கட்டடங்கள் நிமாணத்துறை விதிகளுக்கு அமைய கட்டப்பட வில்லையென்பது கண்ட றியப்பட்டுள்ளதாக அந்த நாட்டின் இராணுவப் பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கட்டட நிர்மாணப் பணி களுக்குப் பொறுப்பானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இராணுவப் பொறியியலா ளர்கள் மேலும் கூறியுள்ளனர்.

பாம் நகரில் அமைக்கப்பட்டி ருந்த வீடுகளில் 90வீதமானவை களிமண்ணினால் நிர்மாணிக்கப் பட்டவை என்பதும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

அணமைக்காலத்தில் உலகில் இடம்பெற்ற மிகவும் மோசமான இயற்கை அனர்த்தம் இதுவென ஈரானிய அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

(இ-9)



மும்பை வடகிழக்கு புறநகர் பகுதியான தானே ரயில் நிலையம் அருகே கட்டி முடிக்கப்படாத நிலையில் இருந்த பாலம் ஒன்று, அவ் வழியாக வந்த பயணிகள் ரயில் மீது இடிந்து விழுந்தது. இந்த விபத்தில் 2 பேர் பலியானார்கள். 5 பேர் படுகாயமடைந்தனர்.

# முற்றுப்பெறாத முடிவுகளோடு முடிந்துபோன 2003

## ஏப்ரல்

07.04.2003 ★ இந்தியா சென்ற ஜனாதிபதி சந்திரிகா தமிழக முதல்வர் ஜெயலலிதா வுடன் சந்திப்பு.



★ சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஜெனிவாவில் சுவிஸ் வெளிவிவகார அமைச்சருடன் சந்திப்பு.

08.04.2003 ★ கண்காணிப்புக்குழுத்தலைவர் ரெலிவ்சன் விடுதலைப் புலிகளின் திருமலைமாவட்ட கட்டளைத் தளபதி பதுமனுடன் சந்திப்பு.

09.04.2004 ★ கண்காணிப்புக் குழுத்தலைவர் ரெலிவ்சன், சு.ப.தமிழ்ச்செல்வன், கேணல் சூசை, கேணல் தீபன் ஆகியோருடன் வன்னியில் சந்திப்பு.



★ ஜனாதிபதி சந்திரிகா - பிரதமர் வாஜ்பாய் புதுடில்லியில் சந்திப்பு.



★ பாகிஸ்தான் தேசிய பாதுகாப்புக் கல்லூரியைச் சேர்ந்த 14 இராணுவ அதிகாரிகள் குழு கொழும்பு வருகை.

14.04.2003 ★ சமாதான முயற்சிகளுக்கு ஆதரவாக வாஷிங்டனில் உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடி மாநாடு ஆரம்பம்.

17.04.2003 ★ மூதூரில் தமிழ் - முஸ்லிம்களிடையேயான மோதல் சம்பவத்தில் 4 பேர் பலி, 20 பேர்காயம்.



18.04.2003 ★ மூதூர் வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் முகமாக ஊரடங்கு.
★ அம்பாறை மாவட்டத்தில் ஆலையடி வேம்புப் பிரதேச சபைத் தவிசாளர் சுட்டுக்கொலை.

19.04.2003 ★ ஜனாதிபதி சந்திரிகா பங்களாதேஷ் பயணம்.
★ சு.ப. தமிழ்ச்செல்வனுடன் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கிளிநொச்சியில் சந்திப்பு.



20.04.2003 ★ டாக்டர் கெங்காதரனுக்கு புலிகளின் தலைவர் பாராட்டிக் கௌரவம்.
★ பிரிட்டனின் முன்னாள் இராணுவத் தளபதி மைக்கல்ரோஸ்யாழ். வருகை.

21.04.2003 ★ பேச்சுவார்த்தையிலிருந்து இடைவிலகுவதாக புலிகள் அறிவிப்பு.

22.04.2003 ★ பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு ஜனாதிபதி உத்தரவு.

24.04.2003 ★ கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகம் முன்பாக தேசத்தைக்காக்கும் பிக்குமார் முன்னணி ஆர்ப்பாட்டம்.
★ புலிகளின் அரசியல் விவகாரக் குழு ஐரோப்பியா செல்வதற்காக கொழும்பு பயணம்.
★ பிரதமர் திருமலை விஜயம்.
★ முன்னாள் யாழ். ஆயர் வண. தியோகுப்பிள்ளை மரணம்.

25.04.2003 ★ கண்காணிப்புக் குழுவை நாட்டைவிட்டு வெளியேறுமாறு கோரி ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம்.




27.04.2003 ★ பிரதமரின் செயலர் யாழ். வருகை.

28.04.2003 ★ ஆனையிறவுச் சமரின் வெற்றிவிழா. தலைவர் பிரபாகரனுக்கு ¼ வெற்றிக் கேடயங்கள் மக்களால் வழங்கப்பட்டன.



# முற்றுப்பெறாத முடிவுகளோடு முடிந்துபோன 2003

## உலக அரங்கில்

### ஏப்ரல்

04.04.2003 ★ பக்தாத் சர்வதேச விமான நிலையத்தை அமெரிக்கக் கூட்டுப்படை கைப்பற்றியது.



09.04.2003 ★ ஈராக்கின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கலைப்பொருட்களை அமெரிக்கா கைப்பற்றியது.

14.04.2003 ★ சிரிய எல்லையில் சதாமின் தம்பி அமெரிக்கப் படையினரால் கைது.

18.04.2003 ★ அமெரிக்கப் படையினரை நாட்டைவிட்டு வெளியேறுமாறு பக்தாத்தில் ஆர்ப்பாட்டம்.

---

### மே

01.05.2003 ★ நாட்டின் சமாதான முயற்சிகள் குறித்து இந்தியாவிற்கு விளக்கமளிக்க மிலிந்த மொறகொட அங்கு பயணம்.

02.05.2003 ★ 2வது உலக இந்துமாநாடு கொழும்பில் ஆரம்பம்.



03.05.2003 ★ ஜப்பானியத் தூதுவர் யசூசி அகாஷி இலங்கை வருகை.
★ சமாதானத்தை வலியுறுத்தி மன்னாரில் பேரணி
★ ஜப்பானியத் தூதுவர், நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் பிரதமருடன் சந்திப்பு.

05.05.2003 ★ அன்ரன் பாலசிங்கம் வன்னி வருகை.



★ அன்ரன் பாலசிங்கம் பிரபா சந்திப்பு

★ இராணுவ முகாம் அமைப்பைக் கண்டித்து யாழ். கோட்டைப் பகுதியில் பொது அமைப்புகள் ஆர்ப்பாட்டம்.



06.05.2003 ★ மாலைதீவு ஜனாதிபதி இலங்கை வருகை.
★ இந்தியக் கடற்கடையின் முன்னாள் பிரதித் தலைமை அதிகாரி பி.ஜே. ஜேக்கப் கொழும்பு வருகை.
★ எரிக்சொல் ஹெய்ம் யாழ். வருகை.



07.05.2003 ★ ஜப்பானியத் தூதுவர் யசூசி அகாஷி தலைவர் பிரபாகரனுடன் சந்திப்பு.

08.05.2003 ★ நோர்வே விசேட பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம், இலங்கைக்கான நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிறஸ்கர், கண்காணிப்புக் குழுத்தலைவர் ஆகியோர் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், சு.ப. தமிழ்ச்செல்வன், கேணல் சூசை, கேணல் தீபன், கேணல் பானு ஆகியோருடன் கிளிநொச்சியில் சந்திப்பு.

11.05.2003 ★ அ.இ.த. காங்கிரஸ் தலைவர் அமரர் குமார் பொன்னம்பலத்திற்கு மாமனிதர் விருது விடுதலைப் புலிகளின் தலைவரால் வழங்கப்பட்டது.



12.05.2003 ★ அன்ரன் பாலசிங்கம் சுகவீனம் காரணமாக லண்டன் பயணம்.
★ அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்டினாரொக்கா பிரதமருடன் சந்திப்பு.

14.05.2003 ★ நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் இலங்கை வருகை.

15.05.2003 ★ ஜோன் பீற்றர்சன் புலிகளின் தலைவர் தலைவர் பிரபாகரனுடன் வன்னியில் சந்திப்பு.

16.05.2003 ★ பிரதமர் ரணில் இந்தியா பயணம்.
★ மட்டக்களப்பில் உள்ள புலிகளின் அலுவலகம மீது கைக்குண்டு வீச்சு

17.05.2003 ★ நோர்வேத் தூதுக்குழுவினர் - புலிகள் சந்திப்பு.

(தொடரும்)

# இன்று ஒரு தகவல்

## செல்வம்

ஒரு ஊரில் பெரிய செல்வந்தர் ஒருவர் இருந்தார். பணத்திற்குப் பஞ்சமில்லை. அதனால் இந்த உலகத்தில் தன் னால் முடியாத காரியம் எதுவுமே இல்லை என நினைத்தார். பணம் இருந்தாலே அந்த நினைப்பு தானாக வந்து விடும். அதனால் இவரும் அப்படி நினைத்ததில் ஒன்றும் தவறில்லை.

அந்த ஊருக்கு ஒருமுறை குருநானக் வந்தார். அவ ருக்கு இந்தச் செல்வந்தர் மிகவும் பிரமாதமாக ஊர் எல்லை யில் வைத்து வரவேற்பளித்தார். ''எங்கள் வீட்டிற்கு வந்து விருந்துண்ண வேண்டும்'' எனக் கேட்டுக்கொண்டார். அவரும் சரி என்று ஒத்துக்கொண்டார்.

உடனே தனது மாளிகையில் பெரியதோர் விருந்திற்கு ஏற்பாடு செய்தார். குருநானக்கை அழைத்துக்கொண்டு வீடு சென்றார். அமரவைத்தார். "ஐயா... நான் இந்த ஊரிலேயே மிகவும் வசதி படைத்தவன். என்னால் எல்லாம் செய்ய முடியும். உங்களுக்காக நான் என்ன செய்யவேண்டும் என்று கூறுங்கள். எதுவாக இருந்தாலும் பரவாயில்லை. எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. என்னால் செய்யமுடியும். என்ன செய்யவேண்டும்? கூறுங்கள்!'' என்றார் பணிவாக.

இதைக்கேட்டதும் குருநானக் சிந்தித்தார் சிறிது நேரம். அதன் பின் தனது சட்டைப்பையினுள்ளே கையை விட்டு ஒரு பழைய ஊசி ஒன்றை எடுத்தார். அதை இவரிடம் கொடுத்தார். "இதோ.... பாருங்கள்... இவ்வளவு தூரம் நீங்கள் கேட்பத னால் கூறுகிறேன். எனக்கு நீங்கள் செய்யவேண்டிய உதவி இது தான்'' என்றார்.

இவரும் ஊசியைக் கையில் வாங்கிக்கொண்டு "இதை என்ன செய்யவேண்டும்?'' என்றார். "நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால்.... இந்த ஊசியைக் கவனமாக வைத்துக்கொள்ளவேண்டும். நாம் இருவரும் இறந்த பின்பு இன்னொரு உலகில் நாம் சந்திக்கக் கூடிய வாய்ப்புள்ளது. அப்போது இந்த ஊசியை என்னிடம் தாருங்கள் இதுதான் நீங் கள் எனக்காகச் செய்யவேண்டிய உதவி'' என்றார் குருநானக் சிரித்துக்கொண்டே.

இதைக்கேட்டதும் அந்தச் செல்வந்தர் முழிக்க ஆரம்பித்து விட்டார். அது எப்படி? ... நான் சாகும் போது இந்த ஊசியை எவ்வாறு வேறு உலகத்திற்கு எடுத்துக்கொண்டு வரமுடியும்? '' என்றார். "ஊசி போன்ற சிறு பொருளைக்கூட இவ்வுலகை விட்டு நாம் போகும் போது எடுத்துக்கொண்டு போக முடியாது எனும் போது உங்கள் செல்வத்தை எப்படி அங்கே எடுத்துவரப் போகின்றீர்கள்?'' என்று கேட்டார் குருநானக்.

அதன் பின் தான் அந்த செல்வந்தர் யோசிக்க ஆரம்பித்தார். குருநானக் சொன்னார் "இதோ பாருங்கள் நாம் செய்யும் நல்லது கெட்டதுதான் கடைசி வரை நம்முடன் கூட வரும். அடுத்தவர்கள் நன்றாக இருக்க வேண்டும். என்பதற்காகச் செலவு செய்யவேண்டும் அப்படிச் செய்யவில்லை என்றால் எந்தப் பயனும் இல்லை'' என்றார். இதைக்கேட்ட செல்வந்தரின் அறிவுக் கண் திறந்ததாம். உடனே குருநானக்கை வணங்கினார் "ஐயா....என்னிடமிருந்த ஆணவம் போய்விட்டது.

# மக்களுக்கு சுகாதார சேவையை வழங்க நாட்டில் வைத்திய நிபுணர்கள் இல்லை

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டு மக்களுக்கு உரியமுறையில் சுகாதார சேவையை வழங்க முடியாதுள்ளமைக்கு முக்கிய காரணம், இங்கு சிறந்த நிபுணத்துவம் வாய்ந்த வைத்தியர்கள் பற்றாக்குறையே என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.



நேற்று முன் தினம் இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற மகப்பேற்று வைத்தியர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வில், பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்கையில், முன்னேற்றமடைந்த பல நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் தாய்-சேய் சுகாதாரப் பராமரிப்புச்சேவை சிறந்த முறையில் மேற்கொள்ளப்படுகின்றது.

ஆயினும், சிறுவர்கள் மத்தியில் சுகாதார பராமரிப்பு மற்றும் போசாக்கின்மை போன்ற பிரச்சினைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

எனவே, சிறந்த நிபுணத்துவம் வாய்ந்த வைத்தியர்களை இங்கு உருவாக்கி நாட்டின் சுகாதாரத் துறையை முன்னேற்றுவதற்கு அனைவரும் முயற்சி எடுக்கவேண்டும்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இலங்கையில் உள்ள பல வைத்திய நிபுணர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். அவர்கள் மீண்டும் தாய்நாட்டிற்குத் திரும்பி தமது மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்க முன்வர வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (ந-60,10)

## புலிகள்- முஸ்லிம் பிரதிநிதிகளின் ஏற்பாட்டில்

# திருமலையில் தமிழ் -முஸ்லிம் உறவை பேண நல்லுறவுக் குழுக்கள்

(திருகோணமலை)

திருகோணமலையில் வாழும் தமிழ்- முஸ்லிம் மக்களிடையே பரஸ்பரம் நல்லுறவையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் வகையில், விடுதலைப்புலிகளும்,முஸ்லிம் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இணைந்து, புரிந்துணர்வு நல்லுறவுக் குழுக்களை அமைத்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் திருமலை கட்டளைத் தளபதி கேணல் பதுமன், அரசியல் துறைப்பொறுப்பாளர் திலக் ஆகியோர் முஸ்லிம் அமைப்புப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டதை அடுத்தே, இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் தொடருகின்ற தமிழ்-முஸ்லிம் சமூகத்தவர்களுக்கிடையேயான தாக்குதல் கள், வன்முறைகளைத் தவிர்க்கும் வகையிலேயே இக் குழுக்களை அமைக்க முடிவு செய்யப்பட்டது.

இதனடிப்படையில் கிண்ணியா, குச்சவெளி, மூதூர், நிலாவெளி ஆகிய பிரதேசங்களுக்கான நல்லுறவுக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக் குழுக்களில் இரு தரப்பிலிருந்தும் தலா 4பேர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்-முஸ்லிம் சமூகங்களுக்கிடையே முறுகல் நிலை ஏற்படும் போது, அங்கு சுமுக நிலையை தோற்றுவிக்கும் நடவடிக்கைகளில் இக்குழுக்கள் ஈடுபடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் சமாதான முயற்சிகள் பாதிப்படையாதவாறு தமிழ்-முஸ்லிம் சமூகங்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்தும் நடவடிக்கைகளிலும் இக் குழுக்கள் ஈடுபடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கிலங்கையில் அண்மைக்காலமாக தொடர்ந்த வன்முறைகள் இரு சமூகத்தவர்களதும் உறவை பாதிப்பதாக அமைந்ததால்,தீய சக்திகளின்அழிவு நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும் இக்குழுக்கள் பாடுபடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-64,8)

# இராசி பலன்

**05. 01. 2004**

**(மார்கழி 21, திங்கட்கிழமை)**

| | |
|---|---|
| திரயோதசி | பி.ப.03.20 மணி வரை |
| ரோகிணி | மு.ப. 11.48 வரை |
| இராகுகாலம் | 08.01-09.31 மணிவரை |
| சுபநேரம் | 12.31-02.01மணிவரை |

**மேடம்**

தொழில் கஷ்டம், அமைதி குறைவு, எதிர்பாராத செலவு, பித்தரோகம்.

**இடபம்**

பெரியோர் ஆதரவு, எதிர்பாராத நன்மை, நண்பர்கள் சந்திப்பு, சயன சுகம்.

**மிதுனம்**

தொழில் மந்த நிலை, எடுத்த காரியம்

# மத வேறுபாடின்றி மாணவர்கள் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் இவ்வாண்டு தொடக்கம் தரம் 6 மாணவர்கள் அனுமதிக்கப்படவுள் ளன.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக செயலிழந்திருந்த இக் கல்லூரி கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் மீள இயங்கி வருவது தெரிந்ததே.

தரம் 1-5 தரம் வரை 69முஸ்லிம் மாணவர்கள் தற்போது இங்கு கல்வி கற்று வருகின்றபோதும் இவ்வாண்டு தொடக்கம் மத வேறுபாடின்றி மாணவர்கள் அனுமதிக்கப்படுவர் என யாழ். கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

தரின் அறிவுக் கண்திறந்ததாம். உடனே குருநானக்கை வணங்கினார் "ஐயா....என்னிடமிருந்த ஆணவம் போய்விட்டது. இனிமேல் என்னிடம் உள்ள செல்வத்தை நல்லவழியில் செல வழிப்பேன்" என்றார்.

நம்மிடம் உள்ள பணம் எப்போதும் நம்முடன் வந்து கொண்டிருக்காது என்பது இதிலிருந்து புரிகின்றது. அதற் காக "நாம் பணம் சேர்ப்பதனைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. பேசாமல் படுத்துத் தூங்கிக் கொண் டிருந்தால் போதும்" என்று நினைத்துவிடக்கூடாது.

முறையான வழியில் பணம் சேர்க்கவேண்டும் அதை முறையான வழியில் செலவு செய்யவேண்டும். அதனால் ஏற்படக்கூடிய மனநிறைவு இருக்கின்றதல்லவா அதனை அனுபவிப்பவர்களுக்குத்தான் புரியும்.

சொர்க்கத்திற்குச் செல்பவர்கள் இங்கிருந்து பணத்தை எடுத்துக்கொண்டு போகமுடியாது. ஆனால் நம் செல்வத்தை மற்றவர்களுக்குப் பயன்படச்செய்து அதனால் ஏற்படும் புண் ணியம் இருக்கின்றதல்லவா அதை எடுத்துக்கொண்டு போக முடியுமாம் இது தான் ஆன்மீகவாதிகள் கூறுவது.

ஜான் நியூட்டன் என்று ஒருவர் கூறினார் " நான் எப்போதா வது சொர்க்கத்திற்குப்போய்ச் சேர்ந்தால் அங்கு 3 அதிசயங் களைப் பார்ப்பேன்" என்றார். "என்ன" என்று கேட்டனர். " நான் யார் யாரெல்லாம் இருக்க மாட்டார்கள் என்று நினைத் தேனோ அவர்களில் சிலர் அங்கிருப்பார்கள். அது ஒரு அதி சயம்" என்றார். சரி அடுத்தது என்ன? என்றனர்.

அடுத்து அங்கே இருப்பார்கள் என்று எதிர்பார்த்த சிலர் இருக்கமாட்டார்கள்! மூன்றாவது அதிசயம் என்ன தெரியுமா? நான் அங்கே இருக்கின்றேன் பாருங்கள் அது தான் மூன்றா வது அதிசயம்" என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

பெரியோர் ஆதரவு, எதிர்பாராத நன்மை, நண்பர்கள் சந்திப்பு, சயன சுகம்.

**மிதுனம்**

தொழில் மந்த நிலை, எடுத்த காரியம் தாமதமாகும், எதிர்பாராத செலவு, மனக் கிலேசம்

**கடகம்**

காரிய சித்தி, தனஇலாபம், செய்தொழில் முன்னேற்றம், நண்பர்கள் உதவி.

**சிங்கம்**

தூரதேசச் செய்தி, அதிகாரம், தொழில் நன்மை, தடைப்பட்ட காரியம் கைகூடும்.

**கன்னி**

ரோகபயம், பிரயாண கஷ்டம், சத்துரு பயம், முயற்சி தாமதம்.

**துலாம்**

பிரயாண பயம், கலகம், கௌரவக் குறைவு, காரிய தாமதம்.

**விருச்சிகம்**

சௌக்கிய விருத்தி, எடுத்த கருமம் கைகூடும், நல்ல வருமானம், கீர்த்தி.

**தனுசு**

சத்துரு ஜெயம், தேக நலன், மன மகிழ்ச்சி, காரிய சித்தி.

**மகரம்**

வியாபார நன்மை, சிறுவியாதி, நண்பர் விரோதம், முயற்சி தாமதம்.

**கும்பம்**

மனச் சோர்வு, நண்பர் சந்திப்பு, உடல் நலக் குறைவு, காரிய தாமதம்.

**மீனம்**

சகோதரர் உதவி, பிரயாண நன்மை, அந்நியர் சந்திப்பு, தொழில் நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

இவ்வாண்டு தொடக்கம் மத வேறுபாடின்றி மாணவர்கள் அனுமதிக்கப்படுவர் என யாழ். கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

**குடாநாட்டு சுத்திகரிப்புப் பணி**

# தொழிலாளர் மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகரிடம்

(சுதுமலை)

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகள் மற்றும் நகர சபைகளில் கடமைபுரியும் சுகாதாரத் தொழிலாளர்கள் மற்றும் திண்மக்கழிவு அகற்றும் தொழிலாளர்களின் வேலைகளை மேற்பார்வை செய்யும் பொறுப்புகள் அந்தந்தப் பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளன.

யாழ். மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களம், சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் தமிழீழ சுகாதாரப்பிரிவினர் ஆகியோரின் ஆலோசனை களுக்கு அமைவாகவே மேற்படி மேற்பார்வைப் பொறுப்புகள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் உள்ள கழிவகற்றும் வாய்க்கால்கள் சீரற்று இருப்பதால் அவற்றின் மூலம் கழிவுகள் அகற்றுதலில் எதிர் நோக்கிய பிரச் சினைகள் மற்றும் அவற்றால் சுற்றுச்சூழல் மாச டைதல், தொற்றுநோய்கள் பரவும் அபாயம் இருந்து வந்தமை பல்வேறு தரப்பினராலும் சுட்டிக் காட்டப் பட்டிருந்தன.

இதனை அடுத்து பிரச்சினைகளை நிவர்த்தி செய் யும் முகமாக தற்போது கழிவகற்றல் தொடர்பான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, அவ்வப் பகுதி பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களின் மேற்பார் வையில் அவை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (ந-252)

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# 2004 புத்தாண்டுப் பலன்

**2004ஆம் ஆண்டில் பன்னிரு ராசிகளுக்கும் ஜனவரி தொடக் கம் டிசம்பர் வரையான பன்னிரு மாத பலன்கள் தனித் தனியாகக் கணிக்கப்பட்டு இங்கு தரப்படுகிறது. பன்னிரு ராசிகளுக்குமான ஜனவரி மாதப் பலன்களின் தொடர்ச்சி.**


## தனுசு



**மூலம் 4 பாதங்கள்-பூராடம் 4பாதங் கள் உத்தராடம் முதல் பாதம் வரை 9 பாதங்கள்**

மாத ஆரம்பம், பூர்வபுண்ணிய இல லத்து செவ்வாய், ராகும் உடனிருக்க, ஏழில் சனி, பாக்கியத்தில் குரு, தன இல்லத்தில் புதன், சூரியன் பழையஆபரணம், வாகனம் போன்றவை மாற்றல் உண்டாகும். கணவன் அல்லது மனைவிக்கு வண்ண உடை கள் வாங்குவீர்கள். நாள்பட்ட வழக்கு இப்போது நடை முறைக்கு வந்தாலும் வேகமில்லை. குழந்தைகளின் கல்வி, ரோக்கியம் இவை நன்றாகவே இருக்கின்றன. எழுத்து மூலம் சில நன்மைகளையும் காணலாம். சகோதர, சகோ தரி வகையில் கருத்து வேறுபாடு உண்டாகும். உத்தி யோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு ஊர்ப் பயணம் முக்கி யம் வாய்ந்தது. விடுமுறை தேவையானதே. மலைவனம் சூழ் பிரதேச பிரயாணம், ஸ்தல பிரயாணம், தெய்வ தரிசனம் போன்ற நிகழ்ச்சிகள் இருக்கும். இக்காலம் பெண கள் மூலம் சில நன்மைகளையும் எதிர்பார்க்கலாம். உறவில் மூத்தவர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பதை அறியலாம். தொழில்வழி சுணக்கமின்றி சென்று கொண்டே இருக்கும். தேக சுகம் திருப்தியானது. அலுவலக சூழ்நிலையும் மற்றவர்களால் புகழப்படும். பழைய நட்பு பிரிந்திருந்தவர்கள் கூடுவர். தொழில்துறையில் புதிய மனிதர்களையும் சந்திப்பீர்கள். போட்டி, பந்தயம், விளை யாட்டு போன்றவகைகள் கௌரவ உயர்வைக் கொடுக் கத்தக்கவை. குடும்பத் தேவைகளை குறித்தப்டி பூர்த்தி செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். மறைத்து வைக்கப்பட்ட விஷயங்களை மற்றவர் அறிய நேரிடுகிறது. இதனால் தொழில் இரகசியம், அறிவதும் உண்டாகும். இந்த ராசி பெண்களுக்கு குடும்பச்சொத்து வரவோ அல்லது திடீர் தன வரவினால் சொத்து வாங்குவதோ உண்டாகும். கண வன், மனைவி உறவு நன்றாகவே இருக்கும். புண்ணியஸ் தல பிரயாணம் தரும செலவுகளும் உண்டாகும். குழந்தை கள் ஆரோக்கியம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் உடை யதே. தொழில்வழியில் வேகம் நிறைந்தவர்களே தவிர சூழ்நிலை இடம்கொடுக்காமல் நீங்களே மந்தமாக இருக்க வேண்டியிருக்கும். கொடுக்கல் வாங்கலில் நிதானப் போக் குத்தான் இருக்கும். உரிய காலத்தில் உரியதைச் செய்ய முடியாத எழுத்து ஒப்பந்தம் போன்றவை ஒப்பந்தத் தொழி லில் உள்ளவர்களுக்கு சிக்கலாகவே இருக்கும். உங்கள் அவசர தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகிவிடும். புத்திர, புத்திரியர்கள் நிலையில் பெருத்த முன்னேற் றத்தைக் காணும்காலம். சுப விஷயம் குறித்து கடிதங் களும், வாழ்த்துக்களும் வரும். பிரயாணம் குடும்பத்துடன் ஏற்பது தவிர்க்கமுடியவில்லை. தொழில் முன்னேற்றம் குடும்பத் தேவைகளை பூர்த்திசெய்வதும் உண்டாகும். பழைய நண்பர் சிலர் உங்கள் புதிய முயற்சிக்கு ஊக்க மளிப்பவர்களாக இருப்பர். பெண்கள், குழந்தைகளுக்கு புது உடைகள் சேர்க்கை, நாகரிகப் பொருட்கள் குடும் பத்திற்குச் சேரும். மேலிடத்து அனுகூல உத்தரவு உங் களை உற்சாகப்படுத்துவதாக இருக்கும்.

## மகரம்



**உத்தராடம் 2,3,4வது பாதங்கள்-திரு வோணம் 4 பாதங்கள்-அவிட்டம் 1,2 பாதங்கள் வரை 9 பாதங்கள்**

மாத ஆரம்பமே சுகாதிபதி செவ் வாய் சுகத்தில், ராகும் உடனிருக்க சுக்கிரன் 2ல் சூரியனும், புதனும் ஜென்மத்தில் குருவக்ரம் உங்களுக்கு நன்மை என்றால் மிகையாகாது. உத்தியோ கப்பிரிவு ஆண், பெண்களுக்கு புதனும் சுக்கிரனும் உங் கள் அலுவல்வகையில் புதிய சூழ்நிலையைத் தோற்று விப்பர். தேர்வு எழுதி வெற்றி பெறுவதில் புதிய சூழ்நிலை யைத் தோற்றிவிப்பர். மற்றும் சிலர் அரசாங்கத்தில் விருது பெறுவதும் குறிப்பாக சிறப்புத் தன்மையாக இருக்கும். நாகரிக வாகனம் வாங்குவதும் உண்டாகும். புதிய உடை கள், அணிகலன்கள் சித்தியும் இருக்கும் உறவினர் வகைக்கு தன உதவி புரிவதும இருக்கின்றன. திரவப்பொருள் வியா பாரிகளுக்கு பெருத்த தன ஆதாயமும் இருக்கும். இயந் திரம், வாகனத்தொழில் உள்ளவர்களுக்கு வரவேண்டிய தனம் உரிய காலத்தே வந்து சேருவதால் தொழில் பெருக் கம் உண்டாக நல்லவாய்ப்பு இருக்கிறது. கணவன், மனைவி உறவு மாதக் கடைசியில் பிணக்கை உண்டாக் கும். இதற்கு உங்கள் போக்கே மூல காரணமாக அமைந் திருக்கும். இப்போது சுக்கிரன், சூரியன் ஒளியில் மங்கி விட்டான் என்பது குறிப்பிடத்தக்கது. கலைத்துறையினர் அலைச்சல் உடையவர்களாகவும், சிலவகையில் அவ மதிப்பைப் பெற்றவர்களாக கொள்ளவேண்டும். குழந்தை களின் மருத்துவச்செலவு தவிர்க்க முடியாது. குடும்பத் திற்கு நாகரிகப்பொருள் சேர்க்கையும் உண்டாகும். கொடுக் கல் வாங்கலில் இப்போது சற்று வேகம் குறையும். சில புதிய திட்டங்களை உருவாக்கும் மாதம். கடன், வழக்குப் பிரச்சினைகள் வேகம் தணிந்து இருக்கும். உறவினர் சந்தித்து கூடிப்பேசி நன்மையும் விருந்தும் கிடைக்கும். பழைய நகை போன்றவற்றை விற்பதும் உண்டாகும். புகழ்மிக்கவர் அரசியல் வாதிகளின் சந்திப்பும் இப்போது ஏற்படும். தூக்கம் அதிகரித்தல், கனவுகள் இப்போது இருக்கும். தளர்ந்திருந்த தொழில்வழி நேராக நிற்கும்காலம் நெருங்கி விட்டது. பாதத்திற்கு சனி வந்தால் நீங்கள் பலம் உள்ள வர்களாக ஆகிவிடுவீர்கள். பழிய சிக்கல்களும் தீர்ந்து விடும். இப்போது சனிதான். கவனித்துச் செயல்பட வைக் கிறது. கணவன், மனைவி உறவு திருப்தியாகத்தான் இருக்கும். வழக்கு, கடன் பிரச்சினைகள் தள்ளிப் போய் விடும். இப்போது நட்பு இந்தவகையில் சுமுகமாக இருக் காது. சில சமயம் இந்தவகை சோர்வைத் தருவதாகவும் இருக்கும். இதனால் கௌரவ செலவுகளும் இடம் பெறத் தான் செய்யும். கூட்டுத்தொழிலில் சுமுகமான சூழ் நிலையே இருக்கும். உறவினர் தொடர்பு, செயல்கள் திருப்தியாக இருக்கும். காது, பல் சம்பந்தமான பிணி செலவு களைக் கொடுக்கும். உத்தியோகப் பிரிவினருக்கு அலு வலகப் போக்கு மற்றவர்களுடன் மன வேற்றுமை, பணப் பிரச்சினையும் இருக்கும்.

**பன்னிரு ராசிகளுக்குமான பெப்ரவரி மாதுப் பலன்கள்.**

# உங்களுக்கு எப்படி?

## கும்பம்



**அவிட்டம் 3,4வது பாதங்கள்-சதயம் 4பாதங்கள்-பூரட்டாதி 1,2பாதங் கள்வரை 9 பாதங்கள்**

தொழில் திருப்தியான போக்கு இருப பதை உணரலாம். தனநிலை குடும்ப நிலையும் இனிமையான போக்கை அதிகரிக்கச் செய்யும். கல்யாணம், காதல் கடிதத் தொடர்பு கண்ணியம். கவர்ச் சியுடையதாக இருக்கிறது. கடைசியில் மட்டும் குடுமபத்தில் பிணககு சலன நிலையையும் உண்டாக்கும். கலைப் பிரிவு எழுத்தாளர்கள் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு பாராட்டுக் கள் கிடைக்கப்பெறும். நல்ல கனவுகள் தோன்றும். தொழில் சம்பந்தமான வகையில் இருந்துவந்த வழக்கு இதர சிக்கல்களையும் ஒருநல்ல முடிவுக்குக் கொண்டுவரும் காலம்இது. கிரகங்களின் சாரபலம் உங்களுக்கு அனு கூலமாக இருப்பதால் நீங்கள் நினைத்தபடியே அவர் களுக்கு செலவுகள் இருப்பதை நீங்கள் உணரவேண்டும். ஒன்றுக்காகக் குறிப்பிட்டு வைத்திருக்கும் பணம் வேறு ஒன்றுக்கு செலவழிக்க வேண்டி இருக்கும். இப்போது விபத்து இல்லை. பாதிப்புகளும் குறைவுதான். பழைய நண்பர்கள் சிலர் இப்போது பக்கபலமாக இருப்பர். தொழில் ஒரேசீராக இருக்கும். தன ஆதாயமும் ஓரளவாகவே இருக கும். குடும்பத்தில் இருந்த பொறுப்புகளில் இருந்து கடு மையான செலவுகள் இடம்பெறும். உத்தியோகப் பிரிவி னர்களுக்கு பதவி உயர்வு அல்லது மாற்றம் குறித்து தகவல் கிட்டும். வழக்குவேகம் குறைந்து விட்டதால் பயம் வேண்டாம. கணவன், மனைவி உறவு சீராகவே இருச் கும். கணக்கை ஒழுங்காக வைத்திருக்கவும், கவனமறதி யினால் சிறு நட்டமும் கடைசியில் இடம்பெறும். பிரயாணம் பயனுடையது. குடும்ப உறவில் ஏற்படும் சில சுபச்செல வுகள் உங்களையும் விடாது. உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவதுபோல் புத்திரர், புத்திரியர்கள் வகை யிலும் கவனம் செலுத்த வேண்டும். விபத்து, அடிபடுதல் போன்றவைகள் அவர்களுக்கு நிகழத்தக்கவை. குடும்பத் திலும் கணவன், மனைவி இடையில் சிறு பூசல் உதய மாகும. இததனைககும காரணம் மூன்றாவது மனிதரே. எனவே உங்கள் கௌரவத்தில் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். காது, பல் சம்பந்தமான பிணி பாதிக்கும். தேவைகள் திருப்தியாக சரிக்கட்டப்படும். கணவன், மனைவ உறவில் இருந்துவந்த இடைவெளி, கருத்துவேறுபாடும் விலகி விட்டன. சுப விஷயம் குறித்து பேசுவதும் முயற் சிப்பதும் உங்களுக்குக் கௌரவச் செலவுகளை அதிக மாக உண்டாக்கும். பிரயாணம் எதிர்பார்த்து, ஓர் அளவு லாபமாகவே இருக்கின்றன. செம்பொன் ஆபரணங்களும் காணாமல்போன பொருளும் இப்போது கிடைத்துவிடு. புத் திரியர், புத்திரர்வகை அவசிய செலவுகள் இருக்கின்றன. பெண்கள், புத்திரியர்கள் வகை நடைமுறை எச்சரிக்கை அவசியமாகும். குடும்பத்தில் சில சுபகாரியங்கள் தடைப் படக்கூடும். இதனால் ஏற்படும் மன அதிர்ச்சி மற்றவர்கள் மீது சீற்றத்தையும் உண்டாக்கும். பொறுமைதான் மிகவும் அவசியம். இக்காலப் பிற்பகுதி முற்போக்கான சூழ்நிலை உதயமாகிக்கொண்டே விடும். புத்திர, புத்திரியர்கள் கல்வி யில் மேன்மைக்கும் குறைவில்லை.

## மீனம்



**பூரட்டாதி 4 வது பாதம்- உத்திரட் டாதி 4 பாதங்கள்-ரேவதி 4 பாதங்கள் வரை- 9 பாதங்கள்**

இது குருவின் வக்ரகாலம். குடும் பத்து ராகு, செவ்வாய் செயற்கை கூடாதே. சுக்கிரனும் 12இல் மற்றவர்களால் கௌரவக் குறைவான வார்த்தையை கேட்க வேண்டியும் இருக்கும். செய்தொழில் வகையில் கூட்டு மனிதர்களின் ஆலோசனைதான் முக்கி யம். குழந்தைகள், குடும்பம் இவற்றை மந்தமான போக் கில் கொண்டவர்கள் சிலருக்கு ஜலப்பிரதேச மனிதர்கள் மூலம் தன உபகாரம் கடைசியில் கிட்டும். உயர் அதி காரிகளைச் சந்திப்பதும் உண்டாகும். எழுத்து ஒப்பந்தம் போன்ற வகைக்கு முழு பலம் உள்ளவர்கள். நீங்கள் குடும்ப வகையில் ஓரளவு திருபதியான போக்குடன் இருந் தாலும் வெளிவட்டாரம் திருப்தியளிக்கவில்லை. ராகு விபத்து போன்றவற்றை உண்டாக்கியவன். தான் என்றா லும் செவ்வாய் ராகுவைப்பார்க்கிறான். என்பது கவனிக் கத்தக்கது. கடைசி நேரத்தில் காக்கப்படுவீர்கள். தொழில் கூட்டு மனிதர்களிடம் ஒரேசீரான போக்கைக் கடைப்பிடிக் கவும். மேலும் ராகு வெளிவட்டாரத்தினரிடம் சில சமயம் மன பேதமும் கசப்பான வார்த்தைகளையும் உண்டாக்கும். எசசரிக்கையுடன் நடந்துகொள்ளவேண்டும். குடும்பப் பொருள வகையில் வழக்கு இருந்தவர்களுக்கு இப்போது பலமற்று இருக்கும் என்பதால் நீங்கள் வேகமாக இருக்கலாம் நட்பு உறவு இநத வகையில் நெருங்கிய நிலையை எதிர் பார்ககவும், தாங்கள் நினைத்ததைச் செய்து சாதனைபுரிந் திடுவீர். தனக்கு எதிராக இருந்தவர்களை மாற்றல் மூலம் மற்றவர்கள் அன்பைப் பெறுவது மறைத்து வைக்கப்பட்ட காரியங்கள் சிலவற்றை வெளிக்குக் கொண்டுவருதல் மன திருப்திக்கும், அமைதிக்கும் காரணமாகும். மாணவ, மாணவியர்களுக்குக் கல்வி பெருமையைத்தரும். இப்போது உஙகளுக்கு பாதகமாக இருந்த கிரகங்கள் எல்லாம் சாத கமாக எல்லைக்கு வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இது குடும்பம உள்ளவர்களுக்கு ஒரு பகுதி திருப்தியாக இல்லை. காரியங்கள் தாமதமாகும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு அலுவலக சூழ்நிலைகள் மிகவும் இனிமை யாக இருக்கின்றன. விளையாட்டு, தேர்வு, பந்தயம் போன்ற வகையில் அனுகூலமான போக்கு இருக்கும். சேர்த்து வைத்த பணத்திற்கு செலவு வந்துவிடும். கலைத் தொழி லில் உள்ளவர்களுககு தொடர்ச்சியாகப் பாதிப்பு இருந்து கொண்டே இருக்கும் உங்களுக்கு ஆகாத சக்திகள்தான் ஓங்கிநிற்கும். பல், காது சம்பந்தமான செலவுகளும் இடம் பெறும். இது திருமண யோகத்தைச் செய்யும். குடும் பத்தில் மங்கள ஒலியை உண்டாக்கும். கூட்டுத்தொழில் செயற்கையைச் சேர்த்து வைக்கும். சிலருக்கு அரசியல் கௌரவப் பதவியும் கிட்டும் காலம். குழந்தையே இல்லா மல் இருந்தவர்களுக்கு ஆண் குழந்தை உற்பவத்தைச் செய்யும். லாரி, கார் போன்ற வாகனம் வைத்து தொழில் செய்பவர்களுக்கு மேலும் புதிய வாகனங்களை வாங்க வைக்கும். வழக்கு மூலம் முன்பு ஏற்பட்ட இழப்புகளை சரிசெய்ய இப்போது வழக்கு வெற்றியை உண்டாக்கும். அரசியல் மனிதர்களுக்கு தனக்கு ஆகாமல் இருந்த சூழ் நிலை மறைந்து பாராட்டும் அதனால் நற்பயனும் உண் டாகும்.

**பன்னிரு ராசிகளுக்குமான மார்ச் மாதுப் பலன்கள்.**

## மேடம்



**அச்சுவினி 4 பாதங்கள்-பரணி 4 பாதங்கள். கார்த்திகை முதல் பாதம் வரை-9 பாதங்கள்**

மாத ஆரம்பம் செவ்வாய், சுக்கிரன், ராகு இந்த மூவரும் ஜென்மத்தில் அமர்ந் திருக்க மூன்றில் சனியும், சந்திரனும், ஏழில் கேது, இது தான் அமைப்பு என்றாலும் 11இல் சூரியன், புதன் உங்கள் இயக்கத்திற்கு உறுதுனையாக நிறபர் என்பதில் சந்தேகம் இல்லை. குடும்ப நிகழ்ச்சிகள் அனைத்தும் மகிழ்ச்சிக் குரியதாகவே அமைந்திருக்கும். கலைப்பரிவு ஆண், பெண் களுக்கு எதிலும் முன்னேற்றமும், மன திருப்தியளிப்ப தாக இருக்கும். சுய விஷயங்கள் குறித்த உங்கள் வேலை கள் முடிக்கப்படும். பிரயாணம் குறிப்பிட்டபடியே நடக்கும். கூட்டு மனிதர்கள் முன்பு இருந்ததுபோல் அல்லாமல், மிக மிக இணக்கமாக இருப்பர். அன்பை வளர்க்க சிலர் அயல்நாடு செல்வது உறவினர், நண்பர்களைச் சந்திப் பது உண்டாகும். குடும்பவகைக்கு நாகரிகப் பொருள் கள் செயற்கை, பட்டுடைகள் வாங்குவதும் மகிழ்ச்சியான நிகழ்ச்சிகளையும் உருவாக்கும். குழந்தைகள் ஆரோக் கியம், கல்வி இந்த வகை மன திருப்தியாக இருக்கும். உங்கள் செயலும் மற்றவர் பாராட்ட அமையும். கலைப் பிரிவு, ஆடல் பாடல் சினிமாத்துறையில் உள்ளவர்களுக்கு இது சிறப்புமிக்க காலமாகும். மேற்கு, வடமேற்குத் திக்கு பெரிய மனிதாகளைப் பெறுவீ. இப்போது உங்கள் பழைய நண்பர்களும் இணைந்து செயற்படுவர். கட்டடம் புதுப்பித் தல், அல்லது கட்டி முடிப்பது போன்ற நன்மையும் உண்டு. பெண்கள் வகைக்கு பெருமைசேர்க்கும் சில ஒப்பந்தங்க ளும் கையெழுத்தாகும். குடும்பத்தில் கணவன், மனைவி உறவு இனிமையாக இருக்கும். உத்தியோகப் பிரிவினர் களுக்கு சிறப்பான பலன்கள் ஏதும் இல்லாவிட்டாலும் கலையுலக மனிதர்களின் தொடர்பு உண்டாக்கும் உங்களுச்கு வேண்டாது இருந்தவர்களும் வெகு அருகில்வந்து செயல் படுவர். தொழில் வகையில் இப்போது புதிய தெம்பு பிறந்து விட்டது எனலாம். குடும்பத்திற்கு பொன் ஆபரண சேர்க்கை உண்டாகும். புகழ்மிக்க மனிதர்களின் சந்திப்பு, உங்கள் புதிய முயற்சிக்கு ஊக்கமளிப்பதாக இருக்கம். சுப விஷே டங்களுக்குப் போவது, விருந்து உண்பது போன்ற நன் மைகள் இருக்கம். இல்லற சுகத்திற்கும் குறைவில்லை. சிலவகை எழுத்து அனுகூலமும் இப்போது உண்டு. சிலர் தாய்வழி உறவினருக்கு செலவு செய்யவேண்டி இருக்கும். உங்கள் சொல்லுக்கு மதிப்பும், செயலுக்குப் பாராட்டும் உண்டு. நல்ல மனிதர்களின் சந்திப்பு, உங்கள் புதிய திட்டங்களுக்கு உயிர் கொடுப்பதாக இருக்கும் சிலர் அயல் நாடு செல்லவும், ஒப்பந்தம் செய்யவும், முழுமூச்சுடன் செயற்படுவர். அரசாங்கம் மூலமாக எதிர்பார்க்கும் எழுத்து வகையினால் ஆகிய உத்தரவு அல்லது ஆதாரம் கிடைப் பதில் காலதாமதமாகலாம். குடுமபத்துப் பெண்கள் வகைக்கு படடாடை சேர்க்கை, பழைய ஆபரண வரவு போன்றவையும உண்டாக்கும். குழந்தைகள் ஆரோக்கியம், கல்வி போன் றவை மன மகிழ்ச்சியை அளிப்பதாக இருக்கும். மருத் துவச் செலவு செய்யவேண்டியும் இருக்கும். இந்த மருத் துவச்செலவு குடும்பத்தில் உள்ள மூத்தவர்களுக்கு தான். வாகனத்தைக் கவனியுங்கள் அது செலவைக் கொடுக்கக் காத்திருக்கிறது. புத்திரியர்கள் வகை செலவு முக்கிய இடம்பெறும். புகழ்மிக்க அரசியல் அரசாங்க வகை மனி தர்களின் நட்பு இப்போது உங்களுக்கு உதவிக்கரங்களாக அமைந்திருக்கும் இதனால் காரிய சாதனையும் உண்டாகும்.

(தொடரும்)

சோதிடமேதை ராமன்

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
**சி.பத்மநாதன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

5

## அறிமுகம்

முக்குவர் சட்டம் என்ற சிறிய நூலில் ஏழு அத்தியாயங்கள் உள்ளன. அவை வழக்குரைஞரின் தேவையொன்றைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் எழுதப்பெற்றவை. அந் நூல் ஒரு தடவை மட்டுமே பிரசுரமாகியது. அதுவும் இப்போது கிடைத்தற்கு அரிதாகி விட் டது. அது இதுவரை எவராலும் தமிழில் மொழியில் பெயர்க்கப்படவில்லை. மட்டக்களப்பு தமிழரின் சமுதாயவமைப்பு, பூர்விகமான வழமைகள் என்பன பற்றிய ஓர் அதிமுக்கியமான வரலாற்று ஆவணம் என்பதால் அதனைத் தமிழிலே மொழி பெயர்த்து இங்கு நாலாம் பகுதியிலே சேர்த்துள்ளோம். முக்குவர் சட்டம் என்பதிலே விளக்கப்படும் கோட்பாடுகள் மட்டக்களப்புத் தமிழர் அனைவருக்கும் பொருத்தமானவை. மருமக்கள் வழியான உரிமை முறை சமூகவழமைகளும் முக்குவருக்கு மட்டுமன்றி அங்குள்ள எல்லாத் தமிழ்ச் சமூகத்தவருக்கும் பொதுவானவை என்பதும் கவனித்தற்குரிய ஒன்றாகும்.

இலங்கையின் கரையோரப்பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்கள் பின்பற்றி வந்த வழமைகளை உலாந்தாக்கார அதிகாரிகளினாலே தொகுத்துக் கொள்ள முடியவில்லை. புத்தளத்தில் வாழ்ந்து முஸ்லிம்களைப் பற்றிய குறிப்பொன்றிலே அவர்கள் சொத்துடைமை, ஆதன உரிமைகள் முதலான விடயங்களிலே தங்கள் சமய சம்பந்தமான சட்டங்களை அனுசரித்தார்களென்று உலாந்தாக்கார அதிகாரிகள் எழுதியுள்ளனர். 17ஆம்,18ஆம் நூற்றாண்டுகளில் அரசினர் அவர்களுக்கெதிராக உருவாக்கிய சட்டங்களினால் முஸ்லிம்களின் குடியிருப்புகளும் வாழ்க்கை முறையும் சீர்குலைந்து காணப்பட்டன. எனவே ஜாவா தேசத்தில் வாழ்ந்த இஸ்லாமியர்களுக்கென்று உருவாக்கிய சட்டத்தொகுதியின் சில பகுதிகளைத் தெரிவு செய்து அவற்றை இலங்கையில் வாழும் முஸ்லிம்களின் விவகாரங்கள் தொடர்பாகக் கையாள வேண்டிய சட்டமாக 1760 ஆம் ஆண்டிலே பிரகடனப்படுத்தினார்கள். பிரித்தானியர் 1806ஆம் ஆண்டிலே அதனை மீண்டும் பிரசுரித்தனர். அதன் பிரதியொன்றே அலெக்ஷாண்டர் ஜோன்ஸ்ரனின் ஏட்டுச்சுவடிகளில் இடம் பெற்றுள்ளது. அது சோனகரல்லது முகமானின, மத்து முள்ஞர் சாதிகளின் பேரிலே கொடுக்கப்படுகிற நியமமான கட்டளைகள் என்னும் தலையங்கத்தைக் கொண்டுள்ளது. அதிலே முதலாம் வாசகம், இரண்டாம் வாசகம் என்ற இரு பிரிவுகள் உள்ளன.

துடற்சியினுடையவுமத்துஞ் சகல வுரிமைப்பங்கின் பேரிலேயும் வுருமையிளந்து போறதின் பேரிலேயும் சொல்லப்படுகிற காரியம் என்பது முதலாவது பிரிவாகும். விவாகசம்பந்தத்தின் பேரிலே நடப்பிக்கவேண்டிய முறை நூல் என்பது இரண்டாம் பிரிவாகும். இவை முறையே சொத்துரிமைகள்,கலியாண சம்பந்தங்கள் என்பன பற்றியனவாகும். இவற்றிலே காணப்படும் விதிகள் எல்லாவற்றுக்கும் இஸ்லாமியச் சட்டங்களே ஆதாரமானவை. 1806ஆம் ஆண்டிலே வெளியான இதன் பிரதிகளிலே 29 தலைமைக்காரரின் பெயர்கள் எழுதப்பட்டிருந்தன. இங்கே வெளியிடப்பட்டிருக்கும் பிரதியின் வாசகத்திலே 1815ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி ஆறு தலைமைக்காரர் வாசகத்தைப்படித்து, அதிற்காணப்படும் விதிகள் யாவும் நடைமுறையில் உள்ளவையென்று சொல்லிக் கையொப்மிட்டுள்ளனர். அவர்கள் வாசகத்தின் முடிவிலே மேல்வரும் குறிப்பினை எழுதியுள்ளனர்.

"இது சொல்லப்பட்ட அறுத்தீக்கலில் அடங்கியிருக்கிற காரியத்துக்கும், இதிலடங்காத காரியத்திற்கும் படித்தறிந்த பெரிய பாதிரிமாரிடத்திலு முசாவுதல் பண்ணிக்கொண்டு எங்கள் வேதக்கட்டளைக்கும் நீதிக்கும் வழமைக்குஞ் சரிபட எங்கள் ஊராகிய மாத்துறையிலும் மரைக்கார் மத்திட்சமார் பாதிரிமார் குடியானனாங்கள் சகலரும் அனேக காலது வற்கம் இதின் படி நடந்தோம் எண்ணும் படிக்கிதின் கீழ் கையெழுத்து வைத்தோம்"

சட்டத்திலே காணப்படும் விதியொன்றினைத் தெளிவுபடுத்தி அவர்கள் ஒரு சுருக்கமான குறிப்பை எழுதியுள்ளனர். 66ஆம் விதி தொடர்பாக அவர்கள் மேல்வருமாறு எழுதியுள்ளனர்.

"விவாக சம்பந்தங்களின் பேரால் சீதனங்கொடுக்கிறது வளமை அப்படிப் பெத்துக் கொண்டதின் பின்பு கலியாணம் நிறைவேறாமற் போகச் சம்பவித்தால் முன்வாங்கினதுக்கிரெட்டியாகக் கொடுக்க லோக வழமை - யிதுவும் பெண்பிறத்தாரின் சம்மதியால் விலகிப் போகச் சம்பவித்தால் கொடுத்ததை யிழந்து போக வழமை"

(தொடரும்)

### அருஞ்சொல் விளக்கம் (தொடர்ச்சி)

**ஆள் வரி**- தலைவலி, பேர்கடமை, யாழ்ப்பாணப்பட்டினத்திலே ஒவ்வொருவரிடமிருந்தும் ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு பணம் என்ற வகையிலே இறுக்கப்பட்ட வரியாகும்.

**இறைசுவதோர்**- றிசீவதோர் என்னும் போர்த்துக்கேய மொழிச் சொல்லின் தமிழ் வடிவம். யாழ்ப்பாண இராச்சியத்திற் பதினேழாம் நூற்றாண்டில் இருந்து வழங்கிய பதவிப்பெயர். வ்ரி நிர்வாகந் தொடர்பானது; உயர்வகுப்பாருக்கு வழங்கப்பட்டது. வடமராட்சி,வலிகமாம் போன்ற பிரிவுகள் ஒவ்வொன்றிலும் இறைசுவதோர் பலரை நியமித்தனர். சில சமயங்களில் முதலியார்களும் இப்பதவியைக்கொண்டிருந்தனர். பண்டாரப்பிள்ளைகளின் உதவியோடு இறைசுவதோர் தங்கள் பணிகளைச் செய்தனர்.

**இலவிசம் (ம)**- செய்கை பண்ணப்படும் வயலில் முல்லைக்காரனுக்கு மேலதிகமாக விடப்படும் பகுதி.

**உடையார்**- தமிழர் வாழும் பகுதிகள் எல்லாவற்றிலும் வழங்கிய நிர்வாகப் பதவிப்பெயர்; தலைமைக்காரரில் ஒருவகையினர். வரிகளைக் குடியானவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல்,வழமைகளை நிலை நாட்டுதல்,ஊர்காவல், ஊழியக்கடமைகளைச் செய்வித்தல், அரசினரின் கட்டளைகளை நிறைவேற்றுதல் முதலியவை அவர்களின் கடமைகளாகும்.

**ஊழியம்**- குடியானவர்கள்,கூலியின்றி மாதம் ஒரு நாளைக்கு அரசினருக்கு செய்யவேண்டிய கடமை. தமிழரிடையிலும் முஸ்லிம்களிடையிலும் காணப்பட்ட பொதுவான வழமை.

**ஏர்நாள் (ம)**- ஏர்பூட்டு, ஏர்மங்கலம் சோதிடரின் ஆலோசனைப்படி வேளாண்மைச் செய்கையினைத் தொடங்கும் நாள் பொதுவாக இராக்காலமாயிருக்கும்.கருமம் முடிந்ததும் விருந்துபசாரம் செய்வது முற்கால வழக்கு.

**ஒற்றி**- பெற்ற கடனுக்கு ஈடாகத் தவணை குறித்துப் புரோசனங்களை அனுபவிக்கும் உரிமையோடு நிலங்களை ஈடு வைத்தல் தவணைக்குள்ளே கடனைத் திருப்பிக்கொடுத்து ஆதனத்தை மீண்டு கொள்ளலாம். தவணை தப்பினால் ஒற்றியான நிலம் கடன் கொடுத்தவனின் உரிமையாகிவிடும். வழமை மிகவும் புராதனமானது. பழந்தமிழ்நூல்களிலும் புராதனமான சாசனங்களிலும் இதைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

(தொடரும்)

**வலம்புரியின் அனுசரணையுடன்**

வட்டுக்கோட்டை-சங்கரத்தை
பாலன் மில் உரிமையாளர்

**இராசையா சோமசுந்தரம்**

அவர்களின் ஞாபகார்த்தமாக நடாத்தப்படும்

**கவிதைப் போட்டி -2004**

**1ம் பரிசு தங்கப் பதக்கம்**
**2ம் பரிசு வெள்ளிப் பதக்கம்**
**3ம் பரிசு வெண்கலப் பதக்கம்**

இவை தவிர மேலும் பல ஆறுதல் பரிசுகள்

**விடயம்**

**"தமிழா உனக்கேன் இக்கதி"**

**விதிகள்**

- போட்டியாளர் ஒரு கவிதை மட்டுமே போட்டிக்கு அனுப்ப முடியும்.
- விடயத்தில் தரப்பட்ட தலைப்பை பிரதிபலிப்பதாக கவிதைகள் அமைய வேண்டும். (கவிதைக்குள் விடயத் தலைப்புவரி இடம்பெற வேண்டும் என்பது அவசியமில்லை)
- போட்டிக்கவிதை மரபுக் கவிதையாகவோ அன்றி புதுக் கவிதையாகவோ அமையலாம்.
- மரபுக் கவிதையாயின் 12 வரிகளை மட்டும் கொண்டதாகவும் புதுக்கவிதையாயின் 12 தொடக்கம் 16 வரிகளுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- கவிதைகள் யாவும் சொந்த ஆக்கமாக இருப்பதுடன், தெளிவாக எழுதப்பட வேண்டும்.
- கவிதை எழுதப்பட்ட தாளில் போட்டியாளர் தனது பெயரை எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.
- வயதெல்லை வரையறுக்கப்படவில்லை
- கவிதைப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் வலம்புரியில் வெளிவரும் கூப்பனையும் உறுதியுரையையும் நிரப்பி கவிதையுடன் இணைத்து அனுப்புதல் அவசியமாகும்.

**உங்கள் கவிதைகளை**
**கவிதைப்போட்டி-2004**
**வலம்புரி**
**இல-15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 31.01.2004ற்கும் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.**

★ பரிசுக்கான கவிதைகள் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படும்.

இங்கே வெட்டி கவிதையுடன் இணைத்து அனுப்புக.

**இராசையா சோமசுந்தரம் ஞாபகார்த்த கவிதைப்போட்டி- 2004 விண்ணப்பம்**

அலுவலகப்பாவனைக்கு

முழுப்பெயர்..........................
..........................
தபால் முகவரி..........................
..........................
பிறந்த திகதி..........................
தே.அ.அ. இல ..........................
மாணவராயின்/பாடசாலையின் பெயரைக் குறிப்பிடவும்.

..........
திகதி
..........
போட்டியாளர் கையொப்பம்

உறுதியுரை

இத்துடன் அனுப்பப்படுகின்ற கவிதை எனது சொந்த ஆக்கம் என்றும் வேறு எந்தக்கவிதைகளின் தழுவலும் அல்ல என்றும். இப்போட்டிக்கு ஒரு கவிதையை மட்டுமே அனுப்பிவைக்கிறேன் என்றும் இத்தால் சத்தியம் செய்கிறேன்.

..........
திகதி
..........
போட்டியாளர்கையொப்பம்

மனத்துக்கண் மாசிலன் ஆதல்
அனைத்து அறன்
ஆகுல நீர பிற. -குறள்

வலம்புரி

## புத்தர் சிலை அமைப்பதில் ஏன் இந்த அவசரம்!

இருபது வருட கால யுத்தத்தால் நலிந்துபோன யாழ்ப்பாணத்தைக் கட்டியெழுப்புவதே இன்றைய முதற்பணியாகும். நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமாயின் யுத்தத்தால் பாதிப்படைந்த வடக்குக் கிழக்கு மாகாணத்தில் இயல்பு வாழ்க்கை ஏற்பட வேண்டும். இதனை அமுல்படுத்துவதற்கு பல்வேறு விட்டுக்கொடுப்புகள்-மனித நேயத்துடனான நோக்குகள் என்பன அவசியமாகும்.

குறிப்பாக வடக்குக் கிழக்கில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கு முதற்கட்டமாக இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இருப்பிடங்களில் குடியமர்வதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.

மக்கள் அகதி முகாம்களிலும், ஓட்டைக் குடிசைகளிலும் தங்கள் வாழ்க்கையைக் கழிக்கும் போது, ஆலய புனரமைப்புக்காக கோடிக்கணக்கான ரூபாய்க்களை செலவிடுவது, சமயம் பேசுகின்ற தத்துவத்திற்கும் மனிதன் நடந்து கொள்ளுகின்ற செயலுக்குமிடையே நிறைந்த வேறுபாடு இருப்பதைக் காட்டி நிற்கிறது. எதுவாயினும் மக்கள் மீளக்குடியமரும் போது ஆலயங்களும் புனரமைக்கப்பட வேண்டும். ஆலயங்கள் புனரமைக்காமல் சேதமடைந்திருப்பது அப் பகுதியில் குடியிருக்கும் மக்களுக்கு நல்லதல்ல என்ற ஐதீகத்தின் அடிப்படையில் ஆலய புனரமைப் புக்களை நியாயப்படுத்தவும் முடியும்.

ஆனால், இப்போது யாழ்ப்பாணத்திலும், நயினாதீவிலும் புத்தர் சிலையை நிறுவுவதற்கான நடவடிக்கை மும்முரமாக எடுக்கப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாண மக்கள் யுத்தத்தால் எல்லாவற்றையும் இழந்து வெறுங்கையோடு இருக்கும் வேளையில், யாழ்ப்பாணத்திலும், நயினாதீவிலும் புத்தர் சிலையை நிறுவதற்கான முயற்சிகளும், அதற்கான ஏற்பாடுகளும் நடைபெறுவது எதற்காக? தமிழர்களின தாயகமான யாழ்ப்பாணம் எமக்கும் சொந்தமானதென்ற உரிமையை நிலைநாட்டுவதற்காகவா?

சமாதான முயற்சிகள் தேக்கமடைந்துள்ளன. யுத்தம் வெடிக்குமா அல்லது சமாதான முயற்சிகள் தொடருமா என்ற கேள்விகளுக்குப் பதில் கூற முடியாத நிலையில் நாடு இருக்கும் போது தென்னிலங்கை பௌத்த பீடங்கள் ஏதோ ஒரு சூழ்ச்சித் திட்டத்தில் யாழ்ப்பாணத்திலும், நயினாதீவிலும் புத்த சிலையை நிறுவுவதற்கு முயற்சி செய்து வருகின்றன. யாழ்ப்பாணத்திலும் நயினாதீவிலும் பௌத்த விகாரைகள் இருக்கின்றன என்பது உண்மை. அந்த விகாரைகளைத் தரிசிப்பதற்காகத் தென்னிலங்கை பௌத்தர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகின்றனர். இவை யெல்லாம் நின்று நிலைக்க வேண்டுமாயின் முதலில் சமாதானம் ஏற்பட வேண்டும். சமாதானம் ஏற்படு வதற்கு முன்னதாக கபட நோக்கத்தில் பௌத்த பீடங்கள் செயற்படுவது சமாதான முயற்சியைப் பாதிக்கும் என்பதுடன் அதன் விளைவு பாரதூரமா னதாகவும் இருக்கும்.

இந் நாட்டில் சமாதானம் ஏற்பட பௌத்த பீடங்கள் பாடுபட வேண்டும். யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பேரில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள குடியிருப்பு நிலங்களை மீட்டு அங்கு மக்கள் மீளக்குடியமர்வதற்கு வகை செய்ய வேண்டும். அவ்வாறு உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்கள் மீளக்குடியமர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தபின்னர் புத்த சிலையை நிறுவ முற்பட்டால் அதனைத் தமிழ்ச் சமூகம் வரவேற்கும்-பாராட்டும்.

இதனை விடுத்து தங்களுடைய சொந்த இடத்திலேயே குடியிருக்க முடியாமல் தமிழ் மக்கள் துன்பப்படும் போது யாழ்ப்பாண மண்ணில் அவசர அவசரமாக புத்தர் சிலையை நிறுவுவதற்கு பௌத்த பீடங்கள் முற்பட்டுள்ளமை மிகவும் வேதனைக்குரியது. பௌத்த பீடங்களைப் பொறுத்தவரை, புத்த சிலைகளை நிறுவி, சிங்கள ஆட்சி-பௌத்தத்தின் பரம்பல் யாழ்ப்பாணத்தில் ஆதிதொடக்கம் இருந்து வந்துள்ளதென வரலாறு கூறுவதற்கு சான்றாதாரம் தேடுவதேயாகும்.

பௌத்த பீடங்களின் இந் நோக்கத்திற்கு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா பின்னணியில் இருப்பது, மிகப்பெரியதொரு மோசடியாகும். தன்னில் இருக்கக்கூடிய குறை-குற்றங்களை நிவர்த்தி செய்வதற்கு பௌத்தர்களின் ஆதரவு அமைச்சர் ஜயலத்திற்குத் தேவையாகவுள்ளது. புனர்வாழ்வு அமைச்சராக இருக்கும் டாக்டர் ஜயலத் இன்றுவரை அகதி முகாம்களில் வாழும் மக்களின் அவலநிலையைப் போக்க நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் புத்தர் சிலையை யாழ்ப்பாணத்தில் நிறுவிவிடுவதற்கு அயராது பாடுபடுகிறார் எனில் அவரின் நோக்கம் எத்தகைய தென்பதைப புரிந்துகொள்வதில் கடினமேதும் இருக்க மாட்டாது.

# கடினமான சவால்களை "சார்க்" எதிர்கொள்கிறது

## 12வது உச்சி மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா

(இஸ்லாமபாத்)

சகல விதமான பிரச்சினைகளையும், பின்தள்ளி ஒன்றுபட்ட பிராந்திய அமைப்பாக முன்செல்வதே தெற்காசிய மக்களின் அபிலாஷை என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்தில் நேற்று ஆரம்பமான சார்க் அமைப்பின் 12வது உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட பேசுகையிலேயே ஜனாதிபதி இதனைத்தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

சார்க் அமைப்பு நிறுவப்பட்டு குறுகிய காலமே சென்றுள்ளபோதும், அது கடினமான சவால்களுக்கு முகம் கொடுத்தே முன்செல்ல நேரிட்டுள்ளது.

தெற்காசியப் பிராந்தியங்களுக்கு இடையிலான பரஸ்பர உறவுகளில் காணப்படுகின்ற பதற்ற நிலையானது அதன் பயணத்தை மேலும் கடினப்படுத்துவதாக அமைந்துள்ளது.

ஆனாலும், ஒன்றிணைக்கப்பட்ட பிராத்திய ஒத்துழைப்பின் மூலமாக சகல விதமான பிரச்சினைகளையும் களைந்து கொள்ள முடியும் என்பதே தெற்காசிய பிராந்திய மக்களின் அபிலாஷைகளாகும் என்றார். (த-61,10)

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

2003 ஆம் ஆண்டு மூன்றாம் தவணைக்கு மூடப்பட்ட பாடசாலைகள் யாவும் இன்று திங்கட்கிழமை திறக்கப்படவுள்ளன.

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான பரீட்சை நிலையங்களாகப் பயன்படுத்தப்படாத பாடசாலைகளின் இவ்வாண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் இன்று முதல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி வரை இடம்பெறும்.

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு பரீட்சை நிலையங்களாகப் பயன்படுத்தப்படவுள்ள பாடசாலைகளின் இவ்வாண்டுக்கான முதலாம் தவணை இன்று முதல் எதிர்வரும் மார்ச் மாதம் 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

முஸ்லிம் பாடசாலைகளுக்கான முதலாம் தவணை இன்று முதல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி வரை நடைபெறும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (த-8)

## பல்கலை மாணவர் அனுமதி

## "மெறிட்" தெரிவு அதிகரிப்பு

(கொழும்பு)

திறமை (மெறிட்) அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்படும் மாணவர் எண்ணிக்கை 40% இருந்து 60% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாக தேசிய கல்வி ஆணைகுழு தெரிவித்துள்ளது.

ஆனால் மாவட்ட அடிப்படையி லான மாணவர் தெரிவு 55 % இருந்து 35% வரை குறைக்கப்பட்டுள்ளது. பின்தங்கிய மாவட்டங்களுக்கு 5% தெரிவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, திறமை அடிப்படையில் மாணவர் தெரிவு அதி கரிக்கப்பட்டதால், திறமையுள்ள பல்கலைக்கழகம் செல்லும் தகுதியுடைய மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதிகள் கிடைக் காதிருந்த நிலைமை மாற்றமடையும் என இவ்வாணைக்குழுவின் தலைவர் மி.குணவர்த்தன தெரிவித்தார். அத்துடன் 2006 ல் திறமை அடிப்படையிலான தெரிவு 80% ஆகவும் மாவட்ட மட்ட மாணவர்கள் 20% ஆகவும் மாற்றங்கள் செய்யப்படும் என்று அவர் கூறினார். (ந-6)

### ௐ தினசரி தியானம்

### சேவையின் மகிமை

நன்மை செய்யவேண்டும் என்ற எண்ணம் மனிதன் உள்ளத்தில் வேரூன்றி விட்டால், அவன் செய்வனவறறிற்கு ஒரு காரணமும் தேடுவதில்லை. பிறருக்குத் தொண்டு செய்வதிலும் நன்மை செய்வதிலும் அவன் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றான். உண்மையில், தன்னலமற்ற சேவையில் தனி ஆனந்தம் இருக்கிறது. விரிந்த நோக்கம் கொள். மனதைத் தூய்மைப்படுத்திக்கொள். தன்னலமற்ற சேவை செய்யும் தன்மையில் வாழ், அப்போது அழிவற்ற அமரத்துவத்தின் ஆனந்தத்தை அனுபவிப்பாய்.

சுவாமி சிவானந்தர்

## பேருந்து சேவை பற்றாக்குறை பொது மக்கள் அதிருப்தி

(தும்பளை)

வடமராட்சி கற்கோவளம் ஊடாக இடம்பெறும் பருத்தித்துறை - தாளையடிக்கான 762 ஆம் இலக்கப் பேருந்து சேவையை அதிகரிக்குமாறு பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டபோதிலும் இதுவரை எதுவித பயனும் கிடைக்கவில்லையென அப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தற்போது 2 சேவைகள் மாத்திரமே இடம்பெற்று வரும் மேற்படி பகுதிக்கான பேருந்துச் சேவை அதிகரிக்குமாறு நெடுஞ்சாலைகள் போக்குவரத்து அமைச்சர், பிரதமர், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரிடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தன.

இப்பேருந்துச் சேவையைச் சீர் செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி ஆகியோரிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கப்பெற்றும், இதுவரை இது தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென அப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (த-24)

## இலங்கை - இந்திய கூட்டு நிறுவனம்

(கொழும்பு)

கல்வி, கலாசாரம், கலை, விவசாய ஆராய்ச்சிகள், விஞ்ஞானம், தொழில் நுட்பம், சுகாதாரம், தொழில் பயிற்சி, அபிவிருத்தி, பெண்கள் கல்வி ஆகியவற்றில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே கூட்டு ஏற்படுத்துவற்கு இலங்கை - இந்திய அரசாங்கங் கள் இணைந்து இந்திய - இலங்கை நிறுவனம் என்ற நிதி வழங்கும் அமைப்பை ஏற்படுத்தியுள்ளன.

இந்த அமைப்பின் கூட்டம் ஒன்று இம் மாத நடுப் பகுதியில் கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த அமைப்பில் இருந்து நிதியு தவி பெறவிரும்புகின்ற தனியார், செயலாளர், இந்திய - இலங்கை அமைப்பு மே / பா/ இந்திய உயர்ஸ்தானிகராலயம் இல , 36 - 38, காலி வீதி, கொழும்பு - 03.

என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-6)

## வெளியுறவு அமைச்சர் மீதான குற்றச்சாட்டு பொய்யானது

(கொழும்பு)

வெளியுறவு அமைச்சர் டிரோன பெர்னாண்டோ அடிக்கடி வெளிநாடு சென்று வருகிறார் என்பதையும் தனது ஐ.நா. செயலாளர் பதவித் தேர்தலுக்காக பொது மக்கள் பணத்தை செலவழிக்கிறார் என்ப தையும் வெளிநாட்டு அமைச்சு நிராகரித்துள்ளது.

இவ்வாறான குற்றச்சாட்டுகள் பொய்யானவை. அமைச்சரின் சகல வெளிநாட்டு விஜயங்களும் உத்தியோகபூர்வமானவை. அவரின் விஜயங்கள் இருதரப்பு, பலதரப்பு விவகாரங்கள் பற்றிய கலந்துரை யாடல்களாக அல்லது சர்வதேச மகாநாடுகளில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துவதாகவே அமைந்திருக்கின்றன.

கடந்த வருடம் அவரின் பய ணச் செலவுக்கு வரவு, செலவுத் திட்டத்தில் ஒதுக்கிய தொகை யின் 56 வீதம் மட்டுமே பயன் படுத்தப்பட்டுள்ளது. 11 மில்லியன் ரூபாக்கள் சேமிக்கப்பட்டன. கடந்த வருடம் வெளிநாட்டு விஜயங்களுக்காக பொதுமக்களின் பணம் எதுவும் பயன்படுத்தப்படவில்லை இவ்வாறு வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது. (த-6)

## அரசு மத நல்லுறவைப் பேண குழுக்களை அமைக்கவுள்ளது

(கொழும்பு)

மதங்களுக்கிடையே சமாதானத்தையும் நல்லுறவையும் ஏற்படத்துவதற்காக அரசு விரைவில் சமாதான மற்றும் நல்லெண்ணக் குழுக்களை அமைக்கவுள்ளது.

அனைத்து மதங்களுக்கிடையேயும் சமாதானத்தையும், நட்புறவையும் வளர்ந்துக் கொள்ளும், முதற்கட்ட நடவடிக்கையாக, மாவட்ட மற்றும் பிரதேச ரீதியில் குழுக்களை அமைத்து, அவர்களுக்கு இது தொடர்பாக சில அறிவுறுத்தல்களை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும்,

தொடர்ந்து அனைத்து இன - மத மக்களுக்கிடையேயும் நட்புறவை வளர்த்துக்கொள்ளும் நடவடிக்கையில் இக் குழு ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-61,10)

## வவுனியாவில் இரு...

தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற் கொண்டார் சடலத்தை பிரஸ்தாப இளைஞனின் மனைவி விஜயமாலா அடையாளம் காட்டினார்.

சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வவுனியா பொது வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு நீதிபதி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை நேற்றிரவு 8 மணியளவில் வவுனியா பண்டா ரிக் குளம் பகுதியில் ஓட்டோ சாரதி ஒருவர் இனந்தெரியா தோரால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார்.

எனினும் இறந்தவரது பெயர் விபரம் நேற்று நள்ளிரவு வரை கிடைக்கவில்லை.

பிரஸ்தப நபரின் ஓட் டோவை வாடகைக்கு அமர் த்தி பயணம் செய்த இனந் தெரியாத நபர்கள் அவரை சுட்டுக் கொலைசெய்து விட்டு தப்பிச் சென்றுள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சடலத்தை இனம்காணும் பொருட்டு பொலிஸார் வைத்திய சாலையில் அதனை ஒப்படைத்துள்ளனர். (இ.13)

## கடலில் ...

அலையால் அடித்துச் செல்லப் பட்டவராவார். அங்கு நீராடிக் கொண்டிருந்த பக்தர்கள் அவரைக் காப்பாற்ற முயற்சி செய்த போதும் அது பலனளி க்கவில்லை.

சம்பவம் குறித்து உடனடியாக கடற்படையினருக்கும் மீனவர்களுக்கும் அறிவிக் கப்பட்டு காப்பாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டபோதும் அவரை மீட்க முடியவில்லை.

நேற்று மாலைவரை கடற் படையினரினதும் மீனவர்களினதும் படகுமூலம் தேடுதல் நடாத்தப்பட்டது. எனினும் அவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை இந்நிலையில் அவர் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இத் தீர்த்த உற்சவத்தின் போது ஆயிரத்திற்கும் மேற் பட்ட பக்தர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிட த்தக்கது. (ச.50.80.89)

## பேரூர் ஆதீன முதல்வரின் அருளுரை

(ஆனைக்கோட்டை)

இந்து கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள பேரூர் ஆதீன முதல்வர் இராமலிங்க சுவாமிகள் இன்று திங்கட் கிழமை காலை 7.00 மணிக்கு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் அருளுரை வழங் கவுள்ளார். (கு-201)

## மரணஅறிவித்தல்கள்

### நடராசா சுந்தரமூர்த்தி

**இல. 108, கச்சேரி நல்லூரைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சுந்தரமூர்த்தி நேற்று முன்தினம் (03.01.2004) அன்று இறைபதம் அடைந்து விட்டார்.**

**அன்னார் காலஞ்சென்ற நடராசா மற்றும் ஜெய லட்சுமி அவர்களின் அன்பு மகனும், மனோகரியின் அன்புக் கணவரும் சுரேகா, சக்திவேல் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மனோகரி, மதிவதனி (இந்தியா), சசிகலா (பிரான்ஸ்), மலர்விழி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சக்திவேல் மற்றும் கமலலிங்கம் (பிரான்ஸ்), நடனேந்திரன் (பிரான்ஸ்), தனஞ்சணன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், சுரேஸ்குமார் (லண்டன்), சுஜாதா, சுஜிதா, கார்த்திப், கௌதம், நிருபன், நிவிஷிகா, நிர்ஷி, அஸ்வத், அஸ்வின் ஆகியோரின் பாசமிகு மாமனாருமாவார்.**

**அன்னாரின் ஈமக் கிரியைகள் எதிர்வரும் புதன் கிழமை (07.01.2004) பிரான்ஸில் நடைபெறும்.**

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்**

தகவல்;
கச்சேரி நல்லூர் ச.மனோகரி (அக்கா)

(சி-7092)

### நடராசா தவக்குமார்

**தாவடி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட நடராசா தவக்குமார் 03.01.2004இல் காலமானார். இவர் நட ராசா-புனிதவதி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், ஜெயகலா (கனடா) அவர்களின் அன்புக் கணவரும், வைத்திலிங்கம்-கதிர்காமநாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும், ஆனந்தகுமார் (பிரான்ஸ்), செல்வகுமார், ஜெயக்குமார், திருமதி விஜிதராசா-கலையரசி ஆகி யோரின் அன்புச் சகோதரரும், விஜிதராசா (சுவிஸ்) வின் அன்பு மைத்துனருமாவார்.**

**அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று பி.ப.3.00மணிக்கு தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.**

தகவல்:

## பிரதமர் ரணிலை ஜனாதிபதியாக்க...

அவர் கூறியுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தல் 2005ல் நடைபெறு மெனத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா அறிவித்துள்ளார் ஆனால் அதற்கான திகதியை அவர் அறிவிக்கவில்லை. இரண்டாவது தடவையாக 1999 டிசம்பர் 22ந் திகதி ஜனாதிபதியாகப் பதவியேற்ற சந்திரிகா மீண்டும் இரண்டாயிரமாம் ஆண்டு நவம்பரில் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா முன்னிலையில் இரகசியமாக பதவிப் பிரமா ணம் செய்து கொண்டார் என சர்ச்சைகள் எழுந்திருந்தன.

இதனை சரத் என் சில்வாவும் உறுதிப்படுத் தியி ருந்தார். இதன்படி ஜனாதிபதி மேலும் ஒரு வருடம் கூடுதலா கப் பதவியில் இருக்கலாம் என்றும் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2006ல் நடைபெறும் என்றும் வாதப் பிரதிவாதங்கள் இடம் பெற்றன.

இது பற்றி நீதியரசர் குறிப்பிடுகையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் பற்றித் தேர்தல் ஆணையாளரே முடிபு செய்ய வேண்டும். இல்லாவிடில் அதன்பொறுப்பை மேன் முறையீட்டு நீதிமன்றத்திடம் ஒப் படைக்க வேண்டுமென்றும் கூறியிருந்தார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் ஜனாதிபதியின் முழு மையான பதவிக் காலம் முடிந்தபின் அரசியல் யாப்பின் படியே நடாத்தப்படும் இதன் படி தேர்தல் 2005ல் நடை பெறும் இதற்கு முன் 1999 டிசம்பர் 2ல் தேர்தல் நடாத்தப்பட்டது இதில் இருந்து சரியாக 6 வருடங்கள் கழித்து மீண்டும் தேர்தல் நடத்தப் படுமென தேர்தல் ஆணையாளர் தெரிவித் துள்ளார். (த-6)

## பிரதமர் ரணிலின் அரசுடன்...

தற்போதைய அரசியல் நிலைமை சிக்கலுக்குள்ளாகியுள் ளதாக அமைந்துள்ளது.

நீண்டகாலமாக தீர்த்து வைக்கப்படாமல் உள்ள இலங்கையின் இனப்பிரச்சினையில் அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து அவற்றைத் தீர்த்து வைக்கும் நோக்கில் செயற்பட்டு வருகிறேன். இந் நிலையில் சமாதான முயற்சி களை முன்னெடுத்துச் செல்லும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான அரசுடன் இணைந்து செயற்பட்டு வருகிறேன்.

இலங்கையிலும் சரி வேறு எந்த நாடுகளிலும் சரி பயங்கரவாத நடவடிக்கைகள் தோன்றுவதற்கான அடிப் படைக் காரணங்களை இனம் கண்டு அவற்றைக் கட்டுப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் பயங்கரவாத நடவடி க்கைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியும்.

பிராந்தியப் பொருளாதரம், வறுமை ஒழிப்பு, பாதுகாப்பு ஆகிய முக்கிய விடயங்களில் கவனம் செலுத்த வேண்டிய பொறுப்பு சார்க் நாடுகளுக்கு உண்டு. அத்துடன் உலகமயப்படுத்தும் சவால்களுக்கும் சார்க் நாடு கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படும். இதற்காக நாம் எம்மைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டும்.

உலக மயப்படுத்தலின் மூலம் முன்னேற்றம் அடையும் நாடுகளுக்கு பொருளாதார சுதந்திரமும் அதற்கான வாய்ப்பும் அவசியமாகும். பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்து அபிவிருத்தி அடை யும் நாடுகள் தமக்கென தனித்துவமான கொள்கை களைத் தயாரித்து செயற் படுவதற்கான உரிமைகள் இருக்க வேண்டும்.


வர்த்தக் கொள்கைகளை உருவாக்கும் போது அபிவிருத்தி அடைந்த, அபிவிருத்தி அடை ந்து வரும் நாடுகளுக்கு சமனான வாய்ப்புக்கள் வழங் கப்பட வேண்டும் என்று கூறிய ஜனாதிபதி, இனப்பிரச்சினைக ளைத் தீர்த்து வைக்கும் முயற்சியில் 1994ம் ஆண்டு எனது அரசு முன்வைத்த சமா தான நடைமுறைகளினையே இந்த அரசும் மேற்கொண்டு வருகிறது. பிரதமருக்கும் எனக்கும் கருத்து முரண் பாடுகள் ஏற்படுகின்ற போதும், சமாதான முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுப் பதில் அரசு, பிரதமர் உட்பட நானும் பற்றுறுதியுடன் இருப்பதாகவும் கூறினார். (ம)

முதலாவது பிறந்ததின

# முதலாவது பிறந்ததின வாழ்த்து

HAPPY BIRTHDAY

05 01 2004



சகல சௌபாக்கியங்களும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ வேண்டுமென எல்லாம்வல்ல இறைவனின் அருள் வேண்டி இப் பிறந்த நன்நாளில் வாழ்த்துகின்றோம்.

இல18, இராமுப்பிள்ளை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(மண்டைதீவு-06)

மண்கும்பானைச் சேர்ந்த
திரு.திருமதி. யோகேஸ்வரன் - தெய்வநிதி
தம்பதிகளின் செல்வப் புதல்வன்

## செல்வன் ஹரிஹரன்

தகவல்:
திருமதி.இ.நல்லையா
(அம்மம்மா)

---

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று பி.ப.3.00மணிக்கு தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
த.நடராசா(தந்தை)
த.திருநாவுக்கரசு(சிறியதந்தை)

தாவடிப் பிள்ளையார் கோவிலடி
தாவடி கொக்குவில்

(8073)

---

DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI

## A/L 2006

ஜனவரி – 10

காலை–8.00 மணி

(கலை, வர்த்தக பிரிவுகள்)

| | | | |
|---|---|---|---|
| கணக்கீடு | – D.SAM | தமிழ் | – மீரா |
| வணிகக்கல்வி | – பசில் | இந்துநாகரிகம் | –ஜோதீஸ்வரன் |
| பொருளியல் | –இராஜேஸ்வரன் | அளவையியல் | –மோகன் |
| பொது உளச்சார்பு | – தவசேகர் | புவியியல் | – இக்னேசியஸ் |
| ஆங்கிலம் | – சுதர்சன் | கிறிஸ்தவம் | – மல்லிகா |
| | | நாடகமும் அரங்கியலும் | – சந்திரன் |

DMI
யாழ் நகர்

(சி-7012)

DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI DMI

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.01.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.